www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

CPI 100 Years இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 | இதழ் 8 | 2025 மே 25 - மே 31 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## பாசிசத்திற்கு எதிராக இளைஞர்களை அணிதிரட்டுவோம்!

# அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 17வது அகில இந்திய மாநாடு அறைகூவல்





**பாசிசத்திற்கு எதிராக இளைஞர்களை அணிதிரட்டுவோம் என திருப்பதியில் நடைபெற்ற அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 17வது அகில இந்திய மாநாடு அறைகூவல் விடுத்துள்ளது.**

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 17வது அகில இந்திய மாநாடு ஆந்திர மாநிலம் திருப்பதியில் மே 15 முதல் 18 வரை நடைபெற்றது.

### மாபெரும் பொதுக்கூட்டம்

பகத்சிங் தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம், சமூக நீதி, தேர்தல் சீர்திருத்தம் ஆகிய மூன்று முழக்கங்களை முன்வைத்து 15.05.2025 அன்று மாலை 5 மணி அளவில் இந்திரா மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற தலைவர் சுக்ஜிந்தர் மகேஷரி தலைமை தாங்கினார். ஆந்திர மாநிலத் தலைவர் ராஜேந்திர பாபு வரவேற்றுப் பேசினார். ஆந்திர மாநிலக் கலைக்குழுக்களின் பாடல், பரத நாட்டியம், கோலாட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.

பிரபல பாடகர் வந்தே மாதரம் ஸ்ரீநிவாஸ் கலந்துகொண்டு புரட்சிகரப் பாடல்களைப் பாடினார்.

இதில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, தேசியச் செயலாளர் கே.நாராயணா, மாநிலச் செயலாளர் ராமகிருஷ்ணா, இளைஞர் பெருமன்ற முன்னாள் பொதுச் செயலாளர் கே.சந்தோஷ்குமார் எம்.பி., இளைஞர் பெருமன்ற பொதுச்செயலாளர் இரா.திருமலை, மாணவர் பெருமன்றப் பொதுச்செயலாளர்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## நாடாளுமன்றத்தைக் கூட்டி விளக்கம் அளிக்காமல்

# உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கச் செல்வதா?

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

ஒன்றிய அரசு நாடாளுமன்றத்திற்கும் மக்களுக்கும் விளக்கம் அளிக்காமல், உலக நாடுகளுக்கு எடுத்துரைக்க பிரதிநிதிகள் குழுவை அனுப்புவதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஐ.நா. பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் உட்பட முக்கிய நாடுகளுக்கு அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அனுப்ப இந்திய அரசு முடிவெடுத்துள்ளது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, இந்திய அரசு உண்மையை மறைத்தும் விலக்கிவைத்தும் நடந்துகொள்வதன் குறியீடாக இது உள்ளது. அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தவோ விளக்கம் அளிக்கவோ இல்லை. அனைத்துக்கட்சிப் பிரதிநிதி குழுக்கள் எதற்காக அனுப்பப்பட்டுள்ளன? அவை என்ன செய்யப் போகின்றன? என்பது தெளிவாக்கப்படவில்லை. இந்தியா சொந்த நாட்டு மக்களையும் நாடாளுமன்றத்தையும் இருளில் வைத்துவிட்டு, வெளிநாட்டு அரசுகளுக்கு விளக்கம் அளிக்கச் செல்வது ஏற்க முடியாததாகும்.

பகல்காம் தாக்குதலுக்குப் பிறகு, பயங்கரவாதத்தை நாடு ஒற்றுமையுடன் எதிர்த்து நின்றது. ஆனால், பாஜகவோ வேறுபாடுகளை அதிகரிக்கவும் அரசியல் ஆதாயம் அடையவும் கருத்து மாறுபாடுகளை அடக்கவும் அந்த உணர்வுகளை பயன்படுத்திக் கொண்டது. பேராசிரியர் அலிகான் மஹ்முதாபாத் கைது – அவரது வார்த்தைகளுக்காக அல்ல, அவரது அடையாளம் மற்றும் நியாயமான விமர்சனத்திற்காக குறிவைக்கப்பட்டது – அரசின் அத்துமீறல்களில் ஒன்றாகும்.

போர்நிறுத்தம் மேற்கொண்டதற்கான விதிமுறைகள், அதில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் பங்கு ஆகியவை குறித்து குழப்பங்கள் அதிகரித்துவருகின்றன. அணு ஆயுத மோதலை பொறுப்பற்ற முறையில் கையாள்வதாக டிரம்ப் மறைமுகமாக சாடியிருந்தார். இவை குறித்து ஒன்றிய அரசு விளக்கமளிக்க வேண்டும். ஆனால் இந்திய அரசு, அதிபர் டிரம்பின் கூற்றுகளை வெளிப்படையாக மறுக்காமலும் கண்டிக்காமலும் இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. மேலும், இருநாடுகளும் வழக்கமான போரில்தான் (conventional warfare) ஈடுபட்டதாக வெளியுறவுச் செயலாளர் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது அதிபர் டிரம்பின் கூற்றுக்கு நேர் எதிராக உள்ளது. இவை குறித்து ஒன்றிய அரசு பதிலளிக்குமா? அல்லது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு என்பது டொனால்ட் டிரம்பின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டதாக இருக்குமா?

பாஜக 11 ஆண்டுகளாகப் பின்பற்றிய வெளியுறவுக் கொள்கைகள் மிகச் சிறிதளவே பலனளித்துள்ளன. ஜி20 மாநாடும் புகைப்படம் எடுத்தல்களும் ஆரவாரமாக நடந்த போதும், இந்தியாவுடன் எந்தப் பெரிய நாடும் உறுதியாக நிற்கவில்லை. இன்னும் மோசமாக பாஜக தலைவர்களில் ஒருவரான விஜய் ஷா, கர்னல் சோபியா குரேஷியை அவருடைய மத அடிப்படையில் பயங்கரவாதிகளுடன் இணைத்துப் பேசினார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர் அமைச்சராகவே தொடர்கிறார். இது சர்வேதச அளவில் அவமானத்தைத் தேடித் தந்திருக்கிறது.

இந்திய அரசு உலக நாடுகளுக்குச் சென்று விளக்கும் முன்பு, சொந்த நாட்டு மக்களையும் ஜனநாயக அமைப்புகளையும் முதலில் மதிக்க வேண்டும். இந்தியா போற்றப்படுவது வெளிப்படைத்தன்மை, ஒற்றுமை கண்ணியம் ஆகியவற்றுக்காக இருக்க வேண்டுமே தவிர, ஆணவம், உண்மைகளை மறைப்பது, அடக்குமுறை ஆகியவற்றுக்காக அல்ல என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

### குடியரசுத்தலைவரே கேளுங்கள்..

பாஜகவின் வெற்றியை அனைவரும் ஏற்க வேண்டும் என்பது எவ்வளவு சரியோ அதேபோல், மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைந்துள்ள மாநில அரசுகளை மதித்து நடக்க வேண்டியது ஒன்றிய அரசின் பொறுப்பாகும்.

... பக்கம் 2

### வாய்ச்சவடால் டிரம்பும் வாய் மூடிய மோடியும்

ஏகாதிபத்தியத்தின் உள் முரண்பாடுகளான ஏகபோகம், சுரண்டல், சமத்துவமின்மை, போர் மற்றும் சிதைவு ஆகியவை தவிர்க்க முடியாமல் நெருக்கடிகளை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இவற்றால் ஏகாதிபத்தியம் தன்னைத்தானே வீழ்த்திக் கொள்கிறது. இது வர்க்கப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்தும்.

... பக்கம் 3

### பாகிஸ்தான் அரசுக்கு சொல்லியே தாக்குதல்..

ஆயுத உற்பத்தியின் பீடமாக உள்ள அமெரிக்கா நாடுகளுக்கு இடையே போரை விரும்புகிறது. சண்டையிடும் இரு நாடுகளுக்கும் எவ்வித கூச்சமும் இன்றி ஆயுதங்களை விற்பனை செய்கிறது. ஈரான், ஈராக் போரின் போதும் இப்படித்தான் நிகழ்ந்தது.

... பக்கம் 5

### நாடாளுமன்றத்துக்கு இணையானவை மாநில சட்டப்பேரவைகள்..

நாடாளுமன்றம், மாநில சட்டப்பேரவைகள் என்று தனித்தனியே செயல்படும் நிலை இருந்தாலும், தத்தமக்கென வழங்கப்பட்டுள்ள உரிமைகளில் பிறர் தலையீடு ஏதுமின்றி ஆட்சி செய்ய அரசமைப்புச் சட்டம் இடம் தந்திருக்கிறது.

... பக்கம் 8

### பாஜக அமைச்சருக்கு உச்சநீதிமன்றம் சாட்டையடி



"நீங்கள் எங்கே மன்னிப்புக் கேட்டீர்கள்? அது எந்த மாதிரியான மன்னிப்பு? மன்னிப்பு எனில் அதற்கு அர்த்தம் இருக்கிறது. வழக்கிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக சிலர் மன்னிப்புக் கேட்கிறார்கள். அந்த மாதிரியான நேரங்களில் அவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். உங்களுடையது எந்த மாதிரியான மன்னிப்பு?" என்று பாஜக அமைச்சர் விஜய் ஷா தரப்பிடம் நீதிபதிகள் காட்டமாக கேள்வி எழுப்பினர்.

... பக்கம் 13




# குடியரசுத் தலைவரே கேளுங்கள்...

போர்க்குணமிக்க தோழர்களே!

**பாஜக ஒன்றிய அரசு கடும் பதற்றத்தில் இருக்கிறது. இந்தியா பாகிஸ்தான் மோதல் காலத்தில் ஏற்பட்ட பதற்றத்தை விடப் பெரும் பதற்றம் பாஜகவைப் பற்றிக் கொண்டுள்ளது.**

பஹல்காம் பகுதியில் 25 சுற்றுலாப் பயணிகளும் அவர்களை அழைத்துச் சென்ற ஒரு குதிரையோட்டியுமாக 26 பேர் எல்லை தாண்டிய பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை அறிந்து நாடு அதிர்ச்சியடைந்தது. ஆனால் பாஜகவும், அதன் தலைமையிலான ஒன்றிய அரசும் கடந்த ஏப்ரல் 8ஆம் தேதி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் நிலைகுலைந்து நிற்கிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு வெளியானதும் நாட்டின் குடியரசு துணைத் தலைவர், நாடாளுமன்ற மாநிலங்களவைத் தலைவர் திரு.ஜகதீப்தன்கர் வானத்திற்கும் பூமிக்குமாக குதியோ குதியெனக் குதித்து உச்சநீதிமன்றத்திற்கு எதிராக முண்டா தட்டி, முஷ்டி உயர்த்தி குஸ்திக்குத் தயாராகி நிற்கிறார்.

தற்போது குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கடந்த 13.05.2025 அன்று உச்சநீதிமன்றத்திற்கு 14 வினாக்களை அனுப்பி விளக்கம் கோரியுள்ளார்.

குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளைச் சுட்டிக்காட்டி வினாக்களை எழுப்பியுள்ளார். இதன் மூலம் உச்சநீதிமன்றம் நிர்பந்திக்கப்படுவதை மக்கள் உணர்கிறார்கள்.

கடந்த 2012 ஆம் ஆண்டு இராமஜென்மபூமி வழக்கில் அப்போதைய குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கேட்டு அனுப்பிய வினாக்கள் பதிலின்றிக் கிடப்பதைக் குடியரசுத் தலைவர் அறிந்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது. இந்தச் சூழலை உருவாக்கியது யார்? திறந்த மனதோடு, சார்பற்ற நடுநிலை நின்று பரிசீலிக்க வேண்டும்.

ஒன்றிய அரசியல் அதிகாரத்தை 2014 ஆம் ஆண்டு முதல் திரு.நரேந்திர மோடியின் தலைமை வழிநடத்தி வருகிறது. அப்போது நடைபெற்ற தேர்தலில் பாஜக அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் அமரும் வாய்ப்பைப் பெற்றது. நாட்டு மக்கள் ஆளும் பொறுப்பை பாஜகவிற்கு வழங்கினார்கள்.

மக்களிடம் பெற்ற அதிகாரத்தின் அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டத்தை மதித்தும், அதன் வழிகாட்டுதல்களைப் பின்பற்றியும் ஆட்சி நிர்வாகத்தை நடத்தும் கடமைப் பொறுப்பை ஏற்பதாகப் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டனர். இரகசியக் காப்பு பிரமாணமும் செய்து கொண்டனர். ஆனால் பிரதமரும், அமைச்சர்களும், ஆளும் கட்சியினரும் அரசியலமைப்புச் சட்டத்தை மதித்துச் செயல்பட்டு வருகிறார்களா? என்ற வினாவிற்கு பாஜகவினர் நெஞ்சில் கைவைத்து நேர்மையான விளக்கமளிக்க வேண்டும்.

மக்கள் அளித்திட்ட தீர்ப்பு எதுவாகினும், அத்தீர்ப்பிற்கு அனைவரும் மதிப்பளித்து தலைவணங்கி ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவே ஜனநாயகம்!

அத்தகைய ஜனநாயகம் குறித்து பாஜகவின் நிலை என்ன?

பாஜகவின் வெற்றியை அனைவரும் ஏற்க வேண்டும் என்பது எவ்வளவு சரியோ, அதேபோல், மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைந்துள்ள மாநில அரசுகளை மதித்து நடக்க வேண்டியது ஒன்றிய அரசின் பொறுப்பாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்கள் பெற்றுள்ள உரிமைகளை மதித்து நடக்க வேண்டியதும் ஒன்றிய அரசின் பொறுப்பாகும்.

தமிழ்நாட்டில் 2021ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான அணி மாபெரும் வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து திமுகழகம் ஆட்சி அமைத்தது. எதிர்த்து நின்ற அஇஅதிமுக பாஜக கூட்டணி தோல்வியடைந்தது. பிரதமர் மோடி பலமுறை தமிழ்நாட்டிற்கு வந்து திரும்பத் திரும்ப ஆதரவு கேட்டும் தமிழ்நாட்டு மக்கள் அவர்களை ஏற்கவில்லை, நிராகரித்து விட்டனர்.


ஜனநாயகத்தின் மீது மோடிக்கும் அவரது கட்சியினருக்கும் நம்பிக்கை இருப்பது உண்மையானால், தமிழக மக்கள் கடந்த சட்டமன்றத் தேர்தலில் வழங்கிய தீர்ப்பை மதித்து, தலைவணங்கி ஏற்று இருக்க வேண்டும். அதுதானே உண்மையான ஜனநாயகப் பண்பாக இருக்க முடியும்.

அத்தகைய ஜனநாயகப் பண்பு பாஜகவினரிடம்









உள்ளதா? பிரதமர் மோடியிடம் இருக்கிறதா? அவர்களிடம் அப்படியான நல்ல பண்பை எதிர்பார்ப்பது சரியில்லைதான். ஏனெனில் அவர்களது குருபீடமான ஆர்எஸ்எஸ் ஜனநாயகத்தை ஏற்காத, அதனை விரும்பாத அமைப்பு என்பதே வரலாறாகும்.

பாஜக ஆட்சியில் இல்லாத பிற எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களான, குறிப்பாக தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசுகளுக்கு எதிராக, ஆளுநரைக் கொண்டு ஓர் போட்டி அரசை நடத்தலாமா?

மதிப்பிற்குரியவர்கள் மக்களா? அல்லது நியமன அதிகாரிகளா?

மக்களைவிட நியமன அதிகாரிகள் மேலானவர்கள் என்ற ஓர் புதிய முறையை, ஜனநாயக விரோத முறையை வலுக்கட்டாயமாகத் திணிப்பதுதான் மோடியின் ஜனநாயகமாகும். அத்தகைய ஜனநாயகம் நாட்டைச் சீரழித்து வருகிறது.

மோடி திடீர் என நாட்டின் பிரதமர் ஆகிவிடவில்லை அவர் பிறந்து வளர்ந்த குஜராத் மாநிலத்தின் முதல்வராகச் செயல்பட்டவர். அவர் அவ்வாறு முதலமைச்சராகக் கோலேச்சிய காலத்தில்தான் கோத்ரா கொடுமை, இதனைத் தொடர்ந்து அரங்கேற்றிய இனப் பேரழிவுச் செயலை எளிதில் கடந்து சென்று விட முடியாது.

மோடி முதலமைச்சராக இருந்தபோது மாநில அதிகாரம் குறித்து நீட்டி முழங்கினார். அன்றாடம் அறிக்கைகளை வெளியிட்டார். மாநில ஆளுநர் ஒத்துழைக்கவில்லை எனக் கூக்குரல் எழுப்பினார். அவற்றையெல்லாம் அவர் மறந்து போயிருப்பினும் நாட்டு மக்கள் மறக்கவில்லை, மறக்க மாட்டார்கள் என்பதனை மோடி நினைவில் கொள்ளல் வேண்டும்!

திமுக தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மோடியின் பரிந்துரைப்படி திரு.ஆர்.என்.ரவி இங்கு அனுப்பப்பட்டார். முன்னாள் காவல்துறை அதிகாரியான ஆர்.என்.ரவி குடியரசுத் தலைவரால் தமிழ்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

கடந்த 2021 செப்டம்பர் 18ல் ஆர்.என்.ரவி ஆளுநர் பொறுப்பேற்றுக் கொண்ட ஆரம்ப நாளிலிருந்து அவரது செயல்பாடுகள், ஆளுநர் மாளிகையை அவர் பயன்படுத்தும் விதம் தன்னிச்சையாக மேற்கொள்ளும் சுற்றுப் பயணம், முரண்பாடுகளை உருவாக்கும் அவரது பேச்சுக்கள், அறிக்கைகள் என அனைத்தும் அருவருக்கத்தக்க வகையில் இன்றுவரை தொடர்கின்றன.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் அதிகார அத்துமீறலை, மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசுக்கு எதிராகப் போட்டி அரசாங்கத்தை நடத்துவதை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஜனநாயகச் சக்திகளும், அரசியல் கட்சிகளும், அஇஅதிமுகவும் கூட கண்டித்தன. பல போராட்டங்களை முன்னெடுத்தன.

ஜனநாயக முறையில் நடைபெற்ற போராட்டங்களை ஆளுநர் பொறுப்பிலிருந்த ரவியும் மதிக்கவில்லை. அவரை நியமித்த குடியரசுத் தலைவரும் கருத்தில் கொள்ளவில்லை. மோடியின் ஒன்றிய அரசு வாய்திறக்கவில்லை.

ஆளுநர் ரவியின் அடாவடித்தனமான செயல்பாடுகள் அராஜக வழியிலானது. அனுமதிக்க முடியாதது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆண்டுக்கொருமுறை கூட்டத் தொடரைத் தொடக்கி வைத்து ஆளுநர் உரையாற்றுவது மரபாகும். ஆளுநர் உரை அரசின் கொள்கைவழி அணுகுமுறையைத் தெளிவுபடுத்தும் ஆவணமாகும்.

ஆளுநர் உரையின் வரைவு தயாரிக்கப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் மாற்றம், திருத்தம் தேவையெனில் அரசோடு கலந்து பேசி இணக்கமான முறையில் இறுதி செய்யப்படுகிறது. ஆளுநர் ஒப்புதல் வழங்கிய உரையைப் பேரவையில் வரிவிடாமல் படிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் ஆளுநரைச் சார்ந்தது.

ஆனால் ஆளுநர் ரவி என்ன செய்தார்! அவர் விருப்பதிற்கேற்பப் படிக்க முயற்சித்தார். பேரவையின் மாண்பையும், மரபுகளையும் தகர்த்து அவமதித்தார்.

முதலமைச்சர் எழுந்து அச்சடித்துக் கொடுக்கப்பட்டுள்ளதை முழுமையாகப் பதிவு செய்ய வேண்டுமெனப் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் வெளிநடப்பு செய்தார். சட்டப்பேரவை வரலாறுகளில் இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது உண்டா? இதன் மீது ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா?

போகட்டும்! பேரவைகளில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவர் அதற்கு ஒப்புதல் அளித்திட வேண்டும் இல்லையெனில் அரசுக்கு மீண்டும் அனுப்பி விளக்கம் அளிக்கக் கோர வேண்டும். இத்தகைய முறைகளை ஆளுநர் பின்பற்றினாரா?

மாறாக ஆளுநர் ரவி எத்தகைய விளக்கமளித்தார்?

மசோதாக்களை எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்வேன், அது எனக்குரிய உரிமை, மசோதாக்கள் மீது நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனில் “அவைகள் செத்துப் போய்விட்டன” என்று பொருளாகும் என இறுமாப்புடன் பதிலளித்தார்.

இதேபோல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டமசோதாக்கள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும். அதனை அவர் முழுமையாகப் படித்து, அவருக்கு அம்மசோதாவின் மீது முழு மனநிறைவு பெற்றால் மட்டுமே அவர் ஒப்புதல் அளித்துக் கையெழுத்திட வேண்டும்.

நாடாளுமன்றம் கடுமையான சர்ச்சைக்குரிய பிரச்சனைகளை சூடான விவாதத்தில் கருத்து மோதல்களோடு நிறைவேற்றப்படும் மசோதாக்களை

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# வாய்ச்சவடால் ட்ரம்ப்பும் வாய் மூடிய மோடியும்



டி.எம்.மூர்த்தி

**“இந்தியா பாக். போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வர்த்தகத்தைப் பெருமளவில் பயன்படுத்தினேன். என் தலையீட்டால்தான் தாக்குதல் நிறுத்தப்பட்டது. வணிகத்தை ஆயுதமாகப் பயன்படுத்தினேன். உடனே தாக்குதலை நிறுத்திவிட்டார்கள்” என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொடர்ந்து பேசி வருகிறார்.**



◆ இதை அதிகாரிகள் மறுக்கிறார்களே அன்றி, பிரதமர் மோடி ஒரு தடவை கூட மறுக்கவில்லை.

◆ உலக வர்த்தக அமைப்பு (டபுள்யூ.டி.ஓ) விதிகளை எல்லாம் மீறி, சீனா மீது 145% இறக்குமதி வரியை ட்ரம்ப் விதித்தார். சீனா அசரவில்லை. பதிலுக்கு அமெரிக்கா மீது 125% வரி விதித்தது.

◆ அமெரிக்கா தனது பயன்பாட்டுக்காகப் பல்வேறு பொருட்களை இறக்குமதி செய்கிறது.

◆ கம்ப்யூட்டர்கள் உள்ளிட்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகள், மோட்டார் வாகனங்கள், மருந்துப் பொருட்கள், ஆப்டிகல், தொழில்நுட்ப மற்றும் மருத்துவ உபகரணங்கள், படுக்கை, விளக்குகள் மற்றும் முன்னரே தயாரிக்கப்பட்ட கட்டிடங்கள், பின்னலாடை, ஆயத்த ஆடைகள், பொம்மைகள், விளையாட்டுக் கருவிகள், காலணிகள் என 2024ம் ஆண்டில் மட்டும் 3.36 டிரில்லியன் டாலர் (சுமார் 280 லட்சம் கோடி ரூபாய்) அளவுக்கு அமெரிக்கா இறக்குமதி செய்தது. இதில் மிகக் கணிசமான பகுதி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும்.

◆ நவ தாராளமயம், உலகமயத்தால் உருவாக்கப்பட்டுள்ள விநியோகச் சங்கிலி, உற்பத்தியில் இருந்து நுகர்வு வரை ஒரே நாட்டில் நடப்பதைச் சாத்தியமற்றதாக்கிவிட்டது. அமெரிக்கா மட்டும் தனியே தப்பித்துக்கொண்டு போக முடியாது. (பெட்டிச் செய்தியைப் பார்க்கவும்)

◆ 145% வரி உயர்வால், அமெரிக்காவுக்கு இறக்குமதியான இந்தப் பொருள்களின் விலைகள் இரண்டு மடங்கு உயர்ந்தன. எனவேதான், அமெரிக்க மக்கள் லட்சக்கணக்கில் திரண்டு பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

◆ ஆரவாரமாகக் கொக்கரித்த டிரம்ப், தான் எறிந்த அம்பு, தன் நெஞ்சிலேயே குத்துவதால் வேறு வழியின்றி பம்மினார். சுவிட்சர்லாந்தின் தலைநகர் ஜெனிவாவில் மே 10ம் தேதி அமெரிக்க உயர்நிலை அதிகாரிகள், சீனத் தலைவர்களைச் சந்தித்து வெறும் 30% என வரி குறைப்பு செய்ய ஒப்புக்கொண்டார்கள்.

◆ இதே தொடை நடுங்கி ட்ரம்ப், இந்தியாவை அதிகபட்ச வரி விதிக்கும் நாடு. ‘வரிகளின் ராஜா’ என்றெல்லாம் தூற்றினார்.

◆ கடந்த பிப்ரவரி மாதத்தில் அமெரிக்காவுக்குச் சென்ற மோடி, டிரம்ப்புடன் பேசி 2025 முடிவதற்குள், வரிகளைக் குறைப்பதற்கும், சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கும், இரு தரப்பு பன்முக ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளலாம் என ஒப்புக் கொண்டு வந்தார்.

(ஆதாரம்: பிசினஸ் ஸ்டாண்டர்ட்)

◆ ஆனால் பேச்சுவார்த்தை நடக்கும் வரை பொறுத்திருக்கவில்லை. உடனடியாக பட்ஜெட்டில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் மோட்டார் பைக்குகள், ஸ்க்ராப்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டது.

◆ இந்த மே 15ஆம் தேதி, கட்டாரில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேசும் போது, “அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இந்தியா எந்த வரியும் விதிக்காது என்ற ‘ஜீரோ டாரிஃப்’ வணிகக் கட்டமைப்பிற்குள் ஒப்பந்தம் செய்து கொள்ள இந்தியா முன்வந்திருக்கிறது” என்று சொன்னார்.

(ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா)

◆ இதையும் இந்திய அதிகாரிகள் மறுத்திருக்கிறார்கள். ஆனால் பேச்சுவார்த்தை நடத்தியவர் மோடி. அவர் ட்ரம்ப் சொல்வதற்கு எதிராக இதுவரை வாய் திறக்கவில்லை.

◆ இந்தியாவுக்கு ட்ரம்ப் வேறு வகையிலாவது நன்மை செய்கிறாரா? சீனாவில் ஆப்பிள் நிறுவனம் ஐபோன் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. இந்த வணிக யுத்தத்தின் காரணமாக அது தனது ஆலை விரிவாக்கத்தை இந்தியாவில் செய்ய நினைக்கிறது.

◆ ஆனால் பகிரங்கமாக டிரம்ப், ஆப்பிள் நிறுவனத்தை மிரட்டுகிறார். இந்தியாவுக்குப் போகக்கூடாது, அமெரிக்காவுக்கு வந்து உற்பத்தி செய் என்று உத்தரவிடுகிறார்.

◆ ஆப்பிள் நிறுவனத்திற்கு, சீனாவில் ஐபோன் செய்வது தான் மலிவானது. இந்தியாவில் தொழிலாளர்களுடைய ஊதியம் சீனாவை விட மிகக் குறைவு. அதோடு இந்திய அரசாங்கம் சலுகைகளும் செய்யத் தயாராக இருக்கிறது.

◆ ஆனாலும், பெரிய அளவிலான உற்பத்தியைப் பொறுத்தவரை, சீனாவின் அதிக உற்பத்தித்திறன் மட்டுமல்ல, துறைமுகங்கள், தடங்கலற்ற மின்சாரம், மிகவும் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வலைப்பின்னல் ஆகிய உள் கட்டமைப்பு வசதிகள் இந்தியாவை விட மேம்பட்டவை மற்றும் நம்பகமானவை.

◆ அமெரிக்கா இந்த இரண்டுக்கும் மாறானது. தொழிலாளர்களின் ஊதியம் மிக அதிகம், அதே நேரத்தில் திறன் உள்ள தொழிலாளர் எண்ணிக்கை குறைவு. இதனால் உற்பத்தியை அமெரிக்காவிற்கு மாற்ற ஆப்பிள் நிறுவனம் விரும்பவில்லை.

◆ எனவே இந்தியா போன்ற நாடுகளை அது நாடுகிறது. அதனால்தான் ஆப்பிள் நிறுவன அதிபரான ‘டிம்’மை, நேரடியாக அழைத்து இந்தியாவுக்குப் போகாதே என கட்டாரில் நடந்த கூட்டத்தில் எச்சரிக்கிறார் ட்ரம்ப்.

◆ 56 இன்ச் மார்பர், விஸ்வ குரு, விகாஷ் புருஷ், வீராதி வீரர் மோடி இதையெல்லாம் எதிர்த்து ஒரு வார்த்தை பேசாமல் மௌன சாமியாராகவே இருக்கிறார்.

◆ உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை, பொதுமேடையில்வைத்து ‘நான் சொல்வதைக் கேட்காவிட்டால் வெளியே போ’ என்று இதே டிரம்ப் மிரட்டி அசிங்கப்படுத்தினார். ஜெலன்ஸ்கி ‘உன் வேலையை மட்டும் நீ பார்’ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்!

◆ சீனா போன்ற பெரிய தேசம் மட்டுமல்ல, பொலிவியா, சீஷெல்ஸ், கயானா உள்ளிட்ட சின்னஞ்சிறு நாடுகள் கூட, டிரம்பின் மேலாதிக்கத்தைப் பகிரங்கமாக எதிர்த்துப் பேசும் போது, வாலைச் சுருட்டிக் கொண்டு, **வாயைப் பொத்திக்கொண்டு மோடி நிற்பது, அவருக்கு மட்டுமல்ல; இந்தியாவுக்கே கேவலம்!**

## ஆடிப்போய் கிடக்கும் 56 இஞ்ச்

பாஜக எம்.பி.யும், நடிகையும், இசட் பிரிவு பாதுகாப்போடு வலம் வருபவருமான கங்கனா ரனாவத் இன்ஸ்டாகிராமில் ஒரு பதிவு போட்டிருந்தார்.

“1. அவர் வேண்டுமானால் அமெரிக்க அதிபராக இருக்கலாம். ஆனால் உலகம் முழுமையும் காதலிக்கப்படும் தலைவர் இந்திய பிரதமர்தான்.

2. ட்ரம்ப் இரண்டு முறைதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார். ஆனால் இந்தியப் பிரதமருக்கு இது மூன்றாவது முறை.

3. ட்ரம்ப், ‘ஆல்ஃபா’ ஆணாக இருக்கலாம். ஆனால் அவருக்கெல்லாம் அப்பா ‘ஆல்ஃபா’ ஆண் எங்கள் பிரதமர்.”

ஆனால் சில மணிநேரத்தில் அந்தப் பதிவை அழித்து விட்டார். அழித்ததோடு நிற்கவில்லை, “எங்கப்பன் குதிருக்குள் இல்லை” என்பது போல இன்னொரு பதிவையும் போட்டார். அது:

“மதிப்புக்குரிய பாஜக தலைவர் ஜே.பி.நட்டா ஜி என்னை அழைத்து, இந்தியாவில் தயாரிக்கக் கூடாது என ஐபோன் ஆப்பிள் நிறுவனத் தலைமை அதிகாரி டிம் குக்கிடம் டிரம்ப் சொன்னதைக் கண்டித்து நான் போட்ட பதிவை நீக்குமாறு கேட்டுக் கொண்டார். நான் பதிவிட்டது எனது சொந்தக் கருத்து. ஆனாலும் எனக்குத் தரப்பட்ட அறிவுறுத்தலின்படி அந்தப் பதிவை நீக்கிவிட்டேன்”

56 இஞ்ச் எப்படி ஆடிப் போய்க் கிடக்குதுன்னு பாருங்க!

## விநியோகச் சங்கிலி (சப்ளை செயின்) என்பது என்ன?



1. **மூலப்பொருட்கள்:** விவசாயம் செய்து நெல், கோதுமை, கரும்பு, பருத்தி, கடலை உள்ளிட்ட விலைப் பொருட்களை உருவாக்குதல். சுரங்கங்கள் தோண்டி உலோகத் தாதுக்களைக் கண்டெடுத்து அவற்றை வெளிக்கொண்டு வந்து உலோகங்களைப் பிரித்தெடுத்தல். இரும்பு உள்ளிட்ட உலோகங்கள், கனிமங்கள், வேளாண் பொருட்கள் இல்லாமல் எந்த உற்பத்தியும் துவங்காது.
2. **வழங்குபவர் (சப்ளையர்):** மேற்கண்ட மூலப் பொருட்களைத் தயாரித்து உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் நிறுவனங்கள்.
3. **உற்பத்திப் பொருட்கள்:** மூலப் பொருட்களின் மீது உழைக்கும் மூலதனமும் வினைபுரிந்து. அதன் மதிப்பை அதிகரித்து, பயன்பாட்டுக்கான உற்பத்திப் பொருட்களாக மாற்றப்படுதல். (ஸ்மார்ட்போன்கள், உடைகள், கார்கள் போன்றவை).
4. **விநியோகம்:** தொழிற்சாலைகளிலிருந்து கிடங்குகள் அல்லது சில்லறை விற்பனைக் கடைகளுக்குப் பொருட்களை நகர்த்துதல்.
5. **சில்லறை விற்பனை:** உற்பத்திப் பொருட்களைக் கடைகள் அல்லது ஆன்லைன் வழியாக நுகர்வோருக்குக் கிடைக்கும் வகையில் கடை விரித்தல்.
6. **வாடிக்கையாளர்:** தயாரிப்பை வாங்கிப் பயன்படுத்தும் இறுதிப் பயனர்.

◆ இவை அனைத்தும் சேர்ந்ததுதான் விநியோகச் சங்கிலி என்று சொல்லப்படுகிறது. மூலப் பொருட்கள், தொழிற்சாலைகள், மூலதனம், உழைப்பு, விற்பனைக்கான சந்தை ஆகிய எல்லாம் ஒரு நாட்டில் தொடங்கி அதே நாட்டில் முடிவதாக இன்று இல்லை.

◆ உலக நாடுகளைத் தனித்தனியாகப் பிரித்து வைத்து, ஏதோ தனது தயவினால்தான் அந்த நாடுகள் எல்லாம் இருப்பது போல பாவனை செய்து, டிரம்ப் மிரட்டிப் பார்க்கிறார்.

◆ ஏகாதிபத்தியத்தின் உள் முரண்பாடுகளான ஏகபோகம், சுரண்டல், சமத்துவமின்மை, போர் மற்றும் சிதைவு ஆகியவை தவிர்க்க முடியாமல் நெருக்கடிகளை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இவற்றால் ஏகாதிபத்தியம் தன்னைத்தானே வீழ்த்திக் கொள்கிறது. இது வர்க்கப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்தும்.

◆ “ஏகாதிபத்தியம் என்பது சோஷலிசப் புரட்சி எழுவதற்கு முன்னால் உள்ள இருட்டு” என்றார் தோழர் லெனின்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 08

# வெறிபிடித்த வன்செயல்கள்!

திருமணமான ஒரே வார காலத்தில் தேனிலவுக்காக காஷ்மீரின் பகல்கம் சென்ற கப்பற்படை அதிகாரி நார்வால் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மனைவி ஹிமான்சி, உயிரிழந்த உடல் அருகே செய்வதறியாமல் அமர்ந்திருக்கிற காட்சி இந்தியா முழுக்கப் பரவி மக்களின் மனதைப் பதைபதைக்க வைத்தது. அதிலும் சங்கிகள் குடம் குடமாய்க் கண்ணீர் வடித்தார்கள்.

ஊர் திரும்பிய பிறகு, “அவரைக் கொன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எங்களுக்கு நீதி வேண்டும். அதற்காக காஷ்மீரிகளையும் முஸ்லிம்களையும் ஏன் குறி வைக்கிறீர்கள். நாங்கள் அதை விரும்பவில்லை” என்று பேட்டி அளித்தார்.

அவ்வளவுதான்! அதுவரை அவர் மீது கட்டமைத்த புனிதப் பிம்பத்தை நொறுக்கிவிட்டு, சங்கிகள் படுகேவலமாக அவரைத் திட்டினார்கள்.

பதி பக்தி இல்லை என்றார்கள். திருமணம் ஆகி சிலநாள்தான் ஆகி இருப்பதால் இறந்தவரைப் பற்றிப் பேச அவருக்கு உரிமை இல்லை என்றார்கள். ஹிமான்சி, டெல்லி பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது முஸ்லிம்களான காஷ்மீரிகளுடன் அவருக்கு ‘உறவு’ இருந்தது என்று நாக்கூசாமல் படுகேவலமாக அவரைத் தூற்றினார்கள்.

வழக்கமாக ஆர்எஸ்எஸ் சங்கிகளின் ஆபாசத் தாக்குதல்களுக்கு உள்ளாகும் பெண்களைப் பற்றி எதுவும் பேசாமல் வாய் மூடிக் கிடக்கும் தேசிய மகளிர் ஆணையம் கூட, “கண்டிக்கத்தக்கது துரதிஷ்டவசமானது” எனச் சொல்ல நேர்ந்தது.

அவரை மட்டுமல்ல, அதே தாக்குதல்கள் உயிரிழந்தவரின் மகளான ஆரத்தி மேனன், கேரளா திரும்பிய பிறகு நிராதரவான நிலையிலிருந்து எங்களை காஷ்மீரின் அன்பு காப்பாற்றியது. அங்கு எனக்கு இரண்டு சகோதரர்கள் கிடைத்தார்கள்” என்றார்.

“அவள் மூஞ்சைப் பார். தந்தை இறந்து போன சோகம் இருக்கிறதா?” என்று தொடங்கி அச்சிலேற்ற முடியாத ஆபாச வசைச் சொற்களைச் சங்கிகள் கொட்டினார்கள்.

போர் நிறுத்தம் என்ற முடிவை இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அறிவித்தார். ஏதோ மோடி, அமித்ஷா, ராஜ் நாத் சிங் வகையறாக்கள் முண்டா தட்டிக்கொண்டு போர்க்களத்தில் நிற்பது போலவும், மிஸ்ரி தான் அதைக் கெடுத்து விட்டது போலவும் எவ்வளவு வசவுகள்!

காட்டிக் கொடுத்தவன், துரோகி, தேசத்துரோகி, வெட்கமற்ற கோழை இன்னும் என்னென்னவோ...! அவரது குடும்பத்தின் புகைப்படத்தை வேறு போட்டு, அவரது குடும்பப் பெண்களைப் பற்றிய ஆபாச வசவுகள்!

ஒரு கட்டத்தில், நொந்து போன விக்ரம் மிஸ்ரி, தனது ‘எக்ஸ்’ வலைதளப் பக்கத்தையே மூடி விட்டார்.

பாகிஸ்தானுக்கு மீதான ராணுவ நடவடிக்கைக்குத் தலைமையேற்றவர்களில் ஒருவரான சோபியா குரேஷியை, ‘பயங்கரவாதிகளின் சகோதரி’ என மதவெறி பொங்க குறிப்பிட்டார் மத்தியப் பிரதேச அமைச்சர் விஜய் ஷா. இந்தக் கூற்றினால் “மொத்த நாடும் வெட்கித் தலைகுனிகிறது” என்று கண்டிக்கிறது உச்ச நீதிமன்றம்.

காஷ்மீரில் இருந்து வந்து படிக்கும் மாணவர்களை, சாலையோரத்தில் துணி விற்பனை செய்பவர்களை அடித்து மிதித்து விரட்டுகிறார்கள். முஸ்லிம்களை ‘ஜெய் ஸ்ரீ ராம்’ என்று கோஷமிடு என்று தடிகளால் அடித்துத் துன்புறுத்துகிறார்கள். சங்கிகளின் வன்செயல் தலை விரித்தாடுகிறது.

இவை அனைத்தும் நூற்றாண்டு காலமாகப் போதித்து போதித்து, அவர்கள் மூளைக்குள் புதைக்கப்பட்டிருக்கும் வன்மத்தின் வெளிப்பாடு.

சங்கிகளின் ஞான குருவான கோல்வால்கர், தனது “சிந்தனைக் கொத்து” எனும் நூலில், முஸ்லிம்கள், கிறித்தவர்கள், கம்யூனிஸ்டுகள் ஆகியோரை நாட்டின் எதிரிகளாகச் சித்தரிக்கிறார்.

அந்நூலில் அவர் எழுதுகிறார்: “வெளியில் உள்ள எதிரிகளை விட மிகவும் கொடியவர்கள், நமது சொந்த மதத்துக்குள் இருப்பவர்கள், மதச்சார்பின்மை அல்லது சோசலிசம் என்ற பெயரில், நாட்டின் எதிரிகளைப் பாதுகாக்க அல்லது அவர்களுடன் தங்களை அடையாளப்படுத்த முயற்சிப்பவர்கள்.”

“இவர்கள்தான் நமது தேசத்திற்கு உண்மையான துரோகிகள். அவர்களின் இந்துப் பெயர்களும் தோற்றமும்தான் அவர்களையும் மிக அபாயகரமானவர்களாக ஆக்குகின்றன”.

அத்தகைய இந்துக்களை, அவர்களது அடையாளங்களைப் பற்றி அக்கறைப்படாமல், நமது அறிவிக்கப்பட்ட எதிரிகளை விட அபாயகரமானவர்கள் என்ற சந்தேகத்துடன் பார்க்கப்பட வேண்டும் என்று அவர் தெளிவுபடுத்துகிறார்.


அவரது வெறிபிடித்த அறிவுரைகளைத்தான் ஆர்எஸ்எஸ் இப்போது அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

“தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். கொல்வார்கள், எரிப்பார்கள், காட்டிக் கொடுப்பார்கள்” என்று அவர் கம்யூனிஸ்ட்களைப் பற்றிச் சொன்னார்.

உண்மையில் ஆர்.எஸ்.எஸ்தான் இவை அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறது.

# மின்கட்டண உயர்வு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பரிந்துரையை அரசு ஏற்கக் கூடாது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்




இதுகுறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :

தமிழ்நாட்டில் வரும் ஜுலை மாதம் முதல் மின் கட்டணம் 3.16 சதவீதம் உயர்த்தப்படும் என்ற செய்தி வெளியாகியுள்ளன. அஇஅதிமுக ஆட்சியில் ஜெ.ஜெயலலிதா முதலமைச்சர் பொறுப்பில் இருந்தவரை ஒன்றிய அரசின் உதய் மின் திட்டத்தை ஏற்கவில்லை. கடுமையாக எதிர்த்து வந்தார். அவரது மறைவுக்குப் பின்னர் எடப்பாடி கே.பழனிசாமி ஆட்சியில் 2017 ஆம் ஆண்டில் உதய் மின் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். இதனால் ஒன்றிய அரசின் நிபந்தனைகளை ஏற்க வேண்டிய கட்டாயத்தை எடப்பாடி அரசு ஏற்படுத்தி விட்டது.

முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா வலுவாக எதிர்த்து வந்த உதய் மின் திட்டத்தில் எடப்பாடி அரசு கையெழுத்து போட்டு, அவரது கட்சியின் கொள்கைக்குத் துரோகம் செய்து, தமிழ்நாட்டு மக்களின் நலனை அடகு வைத்ததை தமிழ்நாடு ஒரு போதும் மன்னிக்காது. உதய் மின் திட்டத்தை ஏற்றுக் கொண்டதால் ஆண்டுக்கு 6 சதவீதம் அல்லது ஆண்டின் முடிவில் நிலவும் பணவீக்கம் இதில் எது குறைவோ, அந்த அளவில் ஆண்டுதோறும் ஜுலை மாதம் மின் கட்டணம் உயர்த்த வேண்டும் என்பது நிபந்தனையாகும். இதன்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கடந்த மூன்று ஆண்டுகளாக மின்கட்டணத்தைத் தொடர்ந்து உயர்த்தி வருகின்றது. இதன் பாதிப்புகள் கடுமையாக ஏற்படுகின்றன.

ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கையால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து நிலைகளிலும் விலைவாசி உயர்ந்து, மக்கள் வாழ்க்கைச் சுமையைக் கூட்டி வருகின்றது. கடந்த 2023 ஆம் ஆண்டு 2.18 சதவீதமும், 2024 ஆம் ஆண்டு 4.83 சதவீதமும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிலைக் கட்டணத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மேலும் 3.16 சதவீத மின்கட்டண உயர்வு என்பது எவ்வகையிலும் ஏற்க இயலாதது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பரிந்துரைத்துள்ள மின்கட்டண உயர்வை தமிழ்நாடு அரசு ஏற்கக் கூடாது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு தமிழ்நாடு முதலமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

குடியரசுத் தலைவர் படித்து, உணர்ந்து அதன் அவசியத்தை ஏற்று ஒப்புதல் வழங்க சில மணி நேரங்கள் மட்டுமே போதுமானதாக இருக்கிறது. உதாரணத்திற்கு வக்ஃபு சட்டத்திருத்த மசோதா.

ஒன்றிய அரசின் மசோதாக்கள் அவருக்கு வந்த 24 மணிநேரத்திற்குள்ளாக அவசர, அவசரமாகக் கையெழுத்து இடுகின்றார். அடுத்த நாளே அரசிதழில் வெளியிடப்பட்டுச் சட்டமாகி விடுகின்றன.

நாடாளுமன்றத்திற்கு ஒரு ஜனநாயகம் சட்டமன்றத்திற்கு வேறொரு ஜனநாயகமா? இது எவ்வகைப்பட்ட ஜனநாயகம் என்பதற்கு ஒன்றிய அரசு விளக்கமளிக்க முன்வருமா? போகட்டும், இவை எல்லாம் போகட்டும் உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்விகள் கேட்டு, குடியரசுத் தலைவர் மூலம் வினா எழுப்பியுள்ள ஒன்றிய அரசுக்கும், ஒன்றிய அரசுக்குத் துணை நிற்கும், நீட்டிய இடத்தில் கையொப்பம் போட்டு ஒன்றிய அரசை திருப்திப்படுத்தும் குடியரசுத் தலைவரிடம் ஒரே ஒரு கேள்வி!

அக்கேள்வி என்னவெனில் வேறொன்றும் இல்லை, பெரும் சட்டப் பிரச்சனைக்குரிய கேள்வி இல்லை. சாதாரணமான கேள்விதான்! தமிழ்நாடு மாநில முதலமைச்சருக்கு, அமைச்சர் பெருமக்களுக்கு, ஒரு குடிமகன் ஒரு கடிதம் எழுதினால் அல்லது ஒரு கோரிக்கை மனு அனுப்பினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பதில் கிடைக்கின்றது!

மாநில அரசு பின்பற்றும் முறையை ஒன்றிய அரசும் கூடப் பின்பற்றி வரும் என்று கருதுகின்றோம்!

ஆனால் குடியரசுத் தலைவரிடமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதில் கிடைக்கின்றதா? என்பதே நமது கேள்வியாகும்!

உச்சநீதிமன்றத்திடம் பதினான்கு கேள்விகளை எழுப்பியுள்ள குடியரசுத் தலைவர் அவர்களே! மேன்மைதாங்கிய ஒன்றிய அரசே! தமிழ்நாடு ஆளுநர் குறித்து, அவரது ஜனநாயக விரோதச் செயல்பாடுகள் குறித்து ஓர் விரிவான கடிதத்தை 2022 நவம்பர் 9 ஆம் நாள் தமிழ்நாட்டைச் சேர்ந்த 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் 12 பேர் உட்பட 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, அஞ்சல் மூலமாக அல்ல, மாட்சிமை தாங்கிய குடியரசுத் தலைவரிடம் நேரில் வழங்கினார்கள். தனி ஒருவராக அல்ல, மதச்சார்பற்ற கூட்டணியின் சார்பில் மூத்த உறுப்பினர் டி.ஆர்.பாலு (திமுக) தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் குழுவாகச் சென்று வழங்கினார்கள். இதற்கு இன்று வரை பதில் அளிக்கவில்லையே ஏன்? ஏன்? ஏன்?

தமிழ்நாட்டு மக்களால் 2019ல் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் 38 பேர் கொடுத்த கடிதத்திற்கு மதிப்பளிக்காதது ஏன்?

நாடாளுமன்ற உறுப்பினர்களை மதித்து அவர்கள் கொடுத்திட்ட கடிதத்தைப் பரிசீலித்து நடவடிக்கை எடுத்து இருந்தால், தீர்வு கண்டு இருந்தால் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடி இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காது அல்லவா?

அவை மட்டுமின்றி தமிழ்நாடு முதலமைச்சர் 2023 ஜூலையில் ஆளுநர் குறித்து ஒன்றிய அரசுக்கு எழுதிய கடிதத்திற்காவது மதிப்பளித்துத் தீர்வு கண்டிருக்கலாம் அல்லவா?

அவை மட்டுமல்ல, 2023 டிசம்பரில் உச்சநீதிமன்றம் ஆளுநருக்கு வழங்கிய அறிவுரை மதித்து நடந்து இருக்கலாம் அல்லவா?

சட்டமன்றத்தை மதிக்க மாட்டோம்! நாடாளுமன்ற உறுப்பினர்களை மதிக்க மாட்டோம்! மக்களின் உணர்வை மதிக்க மாட்டோம்! மாண்புமிகு முதலமைச்சரின் கடிதத்தை மதிக்க மாட்டோம்!

உச்சநீதிமன்ற அறிவுரையைக் கூட மதிக்க மாட்டோம் என அடம் பிடிக்கும் ஒன்றிய அரசே! அதற்கு துணை போகும் குடியரசுத் தலைவர் அவர்களே! உங்களிடம் ஒரு கேள்வி!

ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதச் செயல்களைத் தடுக்கும் திறனற்ற, வலிமையற்ற குடியரசுத் தலைவரே, அரசியலமைப்புச் சட்டத்தின் உணர்வு நிலையிலிருந்தும், ஏற்கெனவே உச்சநீதிமன்றம் “உள்ளங்கை நெல்லிக்கனியென” விளக்கமளித்துள்ள முன்னுதாரணங்களிலிருந்தும், ஏப்ரல் 8 மீண்டும் ஒரு முறை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ள இறுதித் தீர்ப்பின் மீது கேள்வி எழுப்புவது சரியா, தகுமா, அதற்கான தார்மீக உரிமைதான் தங்களுக்கு உண்டா என மக்கள் மன்றம் தொடர்ந்து எழுப்பும் வினாக்களைக் காது கொடுத்து கேளுங்கள்! குடியரசுத் தலைவரே, காது கொடுத்து கேளுங்கள்...

வணக்கம்
மீண்டும் சந்திப்போம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# துல்லிய தாக்குதல் அல்ல; பாகிஸ்தான் அரசுக்குச் சொல்லியே தாக்குதல்!



த.லெனின்

**போருக்கு முன், எதிரிக்குத் தெரியுமாறு அறநெறிப்படி அறிவிப்பு செய்வது போர்த்திறத்தின் ஒரு அங்கமாக சங்க கால தமிழகத்தில் பார்க்கப்பட்டது.**

பாண்டவர்கள் மீது போர்த் தொடுக்க தகுந்த நாளை குறித்துத் தருமாறு பாண்டவர்களில் ஒருவரான சகாதேவனிடம் கௌரவர்கள் கேட்டதாக மகாபாரதம் சொல்கிறது. பாகிஸ்தானில் எந்த சகாதேவன் இருந்தானோ தெரியவில்லை.

நமது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பஹல்காம் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து முன்கூட்டியே பாகிஸ்தான் அரசுக்குத் தெரிவித்து விட்டதாக அவர் பேசி இருக்கிறார். அத்தோடு இது குறித்து அமெரிக்க ட்ரம்ப் நிர்வாகத்திடம் தகவல் தந்து விட்டதாகவும் செய்திகள் வருகின்றன.

ஒரு பக்கம் பார்த்தால் விமர்சிப்பவர்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்றும் பாகிஸ்தான் கைக்கூலிகள் என்றும் அழைக்கும் அவர்களே இன்று பாகிஸ்தானை அழைத்துத் தங்களது துல்லிய தாக்குதல் குறித்த தகவல்களை முன்கூட்டியே தந்திருக்கிறார்கள் என்றால் எள்ளி நகையாட வேண்டிய செய்தியாக இது மாறிவிட்டது அல்லவா அவர்களது தேச பக்தி?

உண்மையில் இவர்கள் இந்தப் போரையே தங்களுக்கான அரசியலாகக் கருதுகிறார்கள், தேர்தல் வெற்றிக்காக அதுவும் பீகார் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தலுக்காக இந்தப் பரப்புரை சாதனமாகப் பயன்படுத்துவது என்பதுதான் அவர்களின் உண்மையான நோக்கம். இப்படியே போனால் பஞ்சாயத்துத் தேர்தலுக்குக் கூட இவர்கள் பாகிஸ்தான் மீது படை நடத்துவார்கள்!

தேர்தல் வெற்றிக்காக ராணுவ வீரர்களை பலி கொடுக்கவும் தயங்க மாட்டார்கள் என்பது இதன் மூலம் விளங்கும்!

ஏற்கெனவே புல்வாமா தாக்குதல் குறித்த எந்த உண்மை நிலையையும் இதுவரை மக்களிடம் எடுத்துச் சொல்லாத இவர்கள்தான் மேலும்




மேலும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இதுதான் பாசிசத்தின் பிரச்சார முறை!

## வீழ்ச்சி கண்ட வெளியுறவுக் கொள்கை!

உள்நாட்டுக் கொள்கையின் விரிவாக்கமே ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கை என்றார் புரட்சியாளர் வி.ஐ.லெனின். அந்தவகையில் பாஜக, மோடியின், வெளியுறவுக் கொள்கை எந்தக் காலத்திலும் முற்போக்கு எண்ணம் கொண்டதாக இருந்ததில்லை. அது வலதுசாரி நாடுகளோடு நட்பைப் பேணுவதில் அதிக கவனம் செலுத்துகிறது. அத்துடன் தனது இந்துத்துவ, மதவெறி கருத்துக்களின் அடிப்படை யிலேயே வெளியுறவுக் கொள்கையை வடிவமைக்கிறது. அதனால்தான் இனப்படுகொலை செய்து வரும் இஸ்ரேலுடன் இணக்கம் காட்டுகிறது. ஜனநாயகத்துக்குப் புறம்பான ராணுவ சர்வாதிகார மியான்மரோடு அது நட்பு பாராட்டிக்கொண்டிருக்கிறது. இந்திய விடுதலைநாள்கொண்டாட்டம்போதெல்லாம் உலக அளவில் பொறுப்பில் உள்ள வலதுசாரி தலைவர்களே அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்படுகிறார்கள். ஹிட்லர் இப்படித்தான் ஒரு நச்சு, அச்சு உருவாக்கினார். இரண்டாம் உலகப்போரில் நாசிசத்தால் உலகமே பெரும் பாதிப்புக்கு உள்ளானது. அதே வகையில்தான் இவர்களும் இன்று செயல்படுகிறார்கள்.

சமீபத்திய பகல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியா ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது பயங்கரவாத இலக்குகளை மட்டுமே குறிவைத்து அழிக்கப் போவதாக அதற்கு முன்பே வீர வசனம் பேசியும், வெளிப்படுத்தியும் வந்தனர். இந்தியப் பிரதமர் மோடியோ பீகார் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் எங்களது பதிலடி கற்பனைக்கு எட்டாத அளவிற்கு இருக்கும் என்று பேசினார். இதற்குப்பிறகும் பயங்கரவாதிகள் தங்களின் முகாம்களில் இருந்தால் அவர்களை விட மிகப்பெரிய முட்டாள்கள் வேறு யாரும் இருக்க முடியாது! இருந்த போதும் அத்தனை பயங்கரவாதிகளையும் நரவேட்டை ஆடிவிட்டதாக இங்கே, நமது இந்திய ஊடகங்களால் நேரடி வர்ணனை செய்யப்பட்டது. இவை அனைத்தும் பச்சைப் பொய் என்பது பின்பு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டது 100 பேர் என்றார்கள். ஆனால் 14 உடல்களுக்கு மேல் எதுவும் காட்சி ஊடகங்களில் காட்டப்படவில்லை. நிலைமை இப்படி இருக்க இதில் நடந்த உண்மைதான் என்ன? ஏன் இவ்வளவு களேபரங்கள்?

## ராணுவ அதிகாரிகளுக்கு மதச்சாயம் பூசும் பாஜக அமைச்சர்!

மூன்று தலைமுறைகளாக இந்திய ராணுவத்தில் பணி புரிந்த, தேசபக்தக் குடும்பத்தைச் சார்ந்த, இந்திய இராணுவ அதிகாரி கர்னல் சோபியா குரேஷி குறித்து, அவரது மத அடிப்படையில் பயங்கரவாதிகளுடன் இணைத்துப் பேசிய விஜய் ஷா போன்ற பாஜக தலைவர்கள் இன்னும் அமைச்சராகத் தொடர்கிறார்கள். இது சர்வதேச அளவில் நமது மரியாதை கிழித்து தொங்க விட்டிருக்கிறது. அதுகுறித்து எல்லாம் இந்த அரசர்களுக்கு அக்கறை இல்லை. உண்மையில் இந்திய ராணுவ ரகசியங்களைப் பாகிஸ்தானுக்கும் வெளிநாடுகளுக்கும் ரகசியமாக அளித்த நபர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவர்களில் பாஜகவைச் சார்ந்தவர்கள் மட்டுமே 20 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு அரசுகளுக்கு விளக்க அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்

சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, ஐ.நா. பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் உட்பட முக்கிய நாடுகளுக்கு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளை அனுப்ப அரசாங்கம் எடுத்த முடிவு, தெளிவில்லாததாக உள்ளது. அரசியல் கட்சிகளிடம் கலந்தாலோசிக்கப்படாமல், அவர்களிடம் சூழல் விளக்கப்படாமல், ஏன் இந்த அவசரகதி? இந்தியாவின் சொந்த நாடாளுமன்றத்தைக் கூட்டி இது குறித்த விளக்கப்படாமல், மக்களுக்கும் எந்தத் தகவலும் தெரிவிக்கப்படாமல் இருக்கும்போது, வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு விளக்கப்படுவது ஏன்? இதனை எப்படி ஏற்றுக் கொள்வது?

அதிலும் காங்கிரஸ் கட்சியின் கருத்தைக் கேட்காமல் சசிதரூரை தேர்ந்தெடுத்து அனுப்புவது கூட ஒரு மாபெரும் ஜனநாயகப் படுகொலையே ஆகும்.

## அமெரிக்கா என்றால் ஐம்பொறிகளும் அடக்கம் காட்டும்!

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இந்தியாவின் மீது அவர் நடத்திய துல்லிய தாக்குதல்கள் ஏராளம். அதற்கெல்லாம் வாய்மூடி மௌனத்தை மட்டுமே காட்டியவர்தான் மோடி!

அமெரிக்காவில் முறையின்றிக் குடியேறியவர்களைக்கைதுசெய்து காலிலும், கையிலும் விலங்கிட்டு இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பினார். சின்னஞ்சிறிய நாடுகள் கூட நெஞ்சுரத்தோடு அதை எதிர்த்துப் பேசியபோது நெடுஞ்சான் கடையாக விழுந்து கிடந்தவர்தான் நமது பாரத பிரதமர் நரேந்திர மோடி. இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு அதிக வரியை விதித்தார் டிரம்ப். தெய்வப்பிறவி வாயே திறக்கவில்லை! எதற்கெடுத்தாலும் பேசும் வெளியுறவுத் துறை அமைச்சரும் எதுவும் பேசவில்லை.

அமெரிக்க நிறுவனம் மாக்சார் மூலம் பாகிஸ்தானுக்கு இந்திய எல்லை வரைபடங்களை அமெரிக்கா கொடுத்ததாக தகவல் உண்டு.

பகல்காம் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு ஐ.எம்.எஃப் மூலமாக ஒரு பில்லியன் டாலர் கடன் வழங்க முடிவு செய்துள்ளனர். அதில் உறுப்பாக உள்ள 24 நாடுகளில், 23 நாடுகளின் ஆதரவோடு பாகிஸ்தானுக்குக் கடன் கொடுக்கக் காரணமாக இருந்தவரும் அமெரிக்க அதிபர் டிரம்ப்தான். இதுதான் காலம், காலமாக அமெரிக்காவின் கொள்கை. அதில் எந்த மாற்றமும் இல்லை. மாறிவிட்டதாக இவர்கள்தான் தம்பட்டம் அடிக்கிறார்கள்!

ஆயுத உற்பத்தியின் பீடமாக உள்ள அமெரிக்கா நாடுகளுக்கு இடையே போரை விரும்பும். சண்டையிடும் இரு நாடுகளுக்கும் எந்தவிதக் கூச்சமுமின்றி ஆயுதங்களை விற்பனை செய்யும். ஈரான், ஈராக் யுத்தத்தின் போது இப்படித்தான் நிகழ்ந்தது. சில நாடுகளுக்கு இடையே போர் நடக்கக் கூடாது என்றும் விரும்பும் ஏனென்றால் அமெரிக்க முதலீடுகள் இரண்டு நாடுகளிலும் இருக்கும் அதற்கு எந்த பங்கமும் வந்து விடக்கூடாது என்பதால் அது போன்ற ஒரு நிலையை எடுக்கும். நாடுகளில் ஜனநாயக முற்போக்கு இயக்கங்கள், இடதுசாரி, கம்யூனிஸ்ட் அரசு அமைந்துவிட்டால் அதை அழித்தொழிக்க எல்லா வடிவங்களிலும் அமெரிக்கா முயலும். அதற்காக பயங்கரவாத அமைப்புகளை உருவாக்கி அதற்குப் பயிற்சியும் அளிக்கும். தானே ஒரு சி.ஐ.ஏ என்ற அடியாள், உளவுக் கும்பலை வளர்த்து அனைத்து நாடுகளின் உள் விவகாரங்களிலும் மூக்கை நுழைத்து அங்கே தனது சித்து விளையாட்டைக் காட்டும்.

அதனால்தான் இந்திய பாகிஸ்தான் போரை உடனே நிறுத்துமாறு மோடியை மிரட்டிப் போரை நிறுத்தினார் டிரம்ப். இந்தியப் பெரு நிறுவனங்களான மோடியின் செல்ல பிள்ளைகள் அதானி, அம்பானிகள் அங்கே முதலீடு செய்துள்ளனர். அதையும் பாதுகாக்க வேண்டும் என்றுதான் தனது பயபக்தியைக் காட்டி போர் நிறுத்தத்தை அறிவித்துவிட்டது.

பகல்காம் தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்தபோது பாகிஸ்தானுக்குத் துணையாக இருப்பதாக அறிவித்த துருக்கி நாட்டுடன் 2600 கோடி ரூபாய் ஆயுத ஒப்பந்தத்தையும் தற்பொழுது செய்துள்ளார் டிரம்ப். அப்படி என்றால் அவர் விஸ்வகுரு மோடியை பற்றி என்ன நினைக்கிறார்? அதையும் மீறி அமெரிக்காவோடு எதற்கு நட்புறவு?

இதுதான் இந்திய வகைபட்ட பாசிசத்தின் ஏகாதிபத்திய சேவை!

தொடர்புக்கு: 9444481703

## தாலிபான் அரசுக்கு நன்றி தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்

தாலிபான் ஆட்சிக்கு வந்த பிறகு அங்குள்ள மக்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. மேலும் பெண்களுக்கான கல்வி, உரிமைகளும் பறிக்கப்பட்டு வருகின்றன. இந்திய இஸ்லாமியப் பெண்களின் உரிமையைக் காக்க முத்தலாக் கொண்டு வந்தேன் என்றவர்கள் இப்போது தாலிபனுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

அதிலும் சமீப ஆண்டுகளாக பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கு இடையே எல்லைப் பிரச்னைகள், பயங்கரவாதம் தொடர்பான பிரச்சனைகளும் உள்ளன. ஆனால் சமீபத்தில் இந்தியா பாகிஸ்தான் மீது நடத்திய தாக்குதலை ஆப்கானிஸ்தானின் தாலிபான் அரசு ஆதரித்தது. இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், ஆப்கானிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தாகியுடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

இந்த நிமிடம் வரை தாலிபான் அரசாங்கத்தை உலகின் பெரும்பாலான நாடுகள் ஏற்காத நிலையில், இந்தியாவும் ஏற்கவில்லை. ஏனெனில் அவர்களே பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண் என்ற புரிதலால்தான். இதன் காரணமாக இந்தியாவில் செயல்பட்டு வந்த ஆப்கானிஸ்தான் அரசின் தூதரகமும் மூடப்பட்டது.

# தமிழ்நாடு அரசின் 34 மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி ரத்து?

■ டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத்

தமிழ்நாட்டில் தேசிய மருத்துவ ஆணையத்தின் விதிமுறைகளைப் பின்பற்றாத, 34 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு விளக்கம் கேட்டு, தேசிய மருத்துவ ஆணையம் குறிப்பாணை அனுப்பியுள்ளது.

பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் பற்றாக்குறை, போதுமான அளவு வருகைப்பதிவு இல்லாமை, பணியாளர்கள் பற்றாக்குறை, ஆய்வகங்கள் பற்றாக்குறை, அறுவை சிகிச்சைகள் செய்யப்படாமை போன்ற குறைபாடுகள் குறித்து தேசிய மருத்துவ ஆணையம் விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்பியுள்ளது.

தேசிய மருத்துவ ஆணையத்தின் கல்வி வாரிய தலைவர் சுக்லால் மீனா மே 7ஆம் தேதி, ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியின் முதல்வருக்கும், ஒரு வாரத்திற்குள் விளக்கத்தை அளிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

விளக்கம் அளிக்காவிட்டால், மருத்துவக் கல்வி தரத்தைப் பராமரித்தல் விதிமுறை, 2023 அத்தியாயம் மிமிமி பிரிவு 8 ன் படி, ஒரு கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2023க்கான பேராசிரியர்கள் பணி உயர்வுக்கான கவுன்சிலிங், இரண்டு வருடங்கள் கழித்து அண்மையில்தான் நடந்து முடிந்தது. 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான பதவி உயர்வு கவுன் சிலிங் இன்னும் நடைபெறப்படவில்லை. இதன் காரணமாக 1500க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. எனவே, இத்தகைய காலதாமதம் என்ற நோய்க்கு முடிவு கட்ட வேண்டும்.

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில், 300 பேராசிரியர், 400 இணைப் பேராசிரியர், 700 உதவிப் பேராசிரியர் மற்றும் சீனியர் ரெசிடெண்ட் பதவிகள் நிரப்பப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது. அரசு மருத்துவர்கள் தொடுத்து, நிலுவையில் உள்ள வழக்குகளால்தான் இந்தப் பேராசிரியர் பதவி உயர்வுகள் காலதாமதமாகிறது என்று அரசு தரப்பு கூறுகிறது. இது மேம்போக்கான காரணமாகும். ஏன் வழக்குகள் தொடரப்படுகின்றன என்ற கேள்வி முக்கியமானதாகும்.

அரசின் தவறான கொள்கையே வழக்குகளுக்கும், பேராசிரியர்கள் பற்றாக்குறைக்கும் அடிப்படைக் காரணமாகும். கொள்கை மாற்றமின்றி இப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க முடியாது.

அப்பொழுது அதிக மருத்துவக் கல்லூரிகள் இல்லை. பத்து மருத்துவக் கல்லூரிகளுக்குள்தான் இருந்தன. இன்று அப்படி அல்ல. மாவட்டம் தோறும் மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவக் கல்லூரிகள் எண்ணிக்கை மூன்று மடங்குக்கும் மேலாகி 36 ஆக உள்ளன. ஆனால் அரசு மருத்துவர்கள் எண்ணிக்கை இரண்டு மடங்கு கூட ஆகாமல் பல ஆண்டுகளாக அதே எண்ணிக்கையில் ஏறத்தாழ 20,000 ஆகவே உள்ளது.

ஏராளமான இளநிலை, முதுநிலை, உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளைப் படித்துவிட்டு மருத்துவர்கள் வேலை இல்லாமல் உள்ளனர். அவர்கள் அரசு வேலைக்கு வருவதற்குத் தயாராக உள்ளனர். அரசுப் பணிக்குக் கடும் போட்டி உள்ளது. ஆனால், அவர்களுக்கு வேலை வழங்க அரசு தயாராக இல்லை. இது அரசு மருத்துவமனைகளில் கடும் மருத்துவர்கள், பேராசிரியர்கள் பற்றாக்குறையை உருவாக்கி உள்ளது.

இந்நிலையில் தற்போது, அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்களுக்கான புதிய பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை. இது மிகப்பெரும் பணிச் சுமையை மருத்துவர்களுக்கு உருவாக்கி வருகிறது.

நோயாளிகளுக்கும் கடுமையான சிரமங்களை உருவாக்கி வருகிறது. இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை கவலைப்படுவதேயில்லை. முன்பு பெரும்பாலான மருத்துவர்கள் அரசுப் பணிக்கு வரத் தயங்கினர். ஆனால் தற்பொழுது நிலவும் கடும் வேலையில்லா திண்டாட்டத்தின் காரணமாக எம்.டி, எம்.எஸ், டிம், எம்.சி.எச் போன்ற முதுநிலை மற்றும் உயர் சிறப்பு மருத்துவம் படித்த மருத்துவர்கள் கூட, நூற்றுக்கணக்கில், இளநிலை மருத்துவமான எம்.பி.பி.எஸ் அளவிலான வேலைக்குக் கூட, குறைவான ஊதியத்தில் அரசுப் பணிக்கு வருகிறார்கள். அவர்கள் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் பணியில் சேர்ந்தாலும், சிறப்பு மற்றும் உயர் சிறப்பு மருத்துவம் படித்த காரணங்களால், 2009 ஆம் ஆண்டு நிளி 255 ன் படி மருத்துவக் கல்வி இயக்க dorectorate ல் (DME) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மாறுதல் பெற விண்ணப்பிக்கிறார்கள். அவர்களில் பலர் ஏற்கெனவே இரண்டு ஆண்டுகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் பாண்டு போஸ்டிங் செய்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, முதுநிலை மருத்துவப் படிப்பைப் படித்து முடித்து விட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்களில், எம்.ஆர்.பி 2024,



எம்.ஆர்.பி 2025 தேர்வுகள் மூலம் பணியில் சேர்ந்து, அங்கு தற்போது பணிபுரியும் அரசு மருத்துவர்களை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பணி மாறுதல் செய்யக்கூடாது எனச் சிலர் அரசுக்கு அழுத்தங்கள் கொடுப்பதாகக் கூறப்படுகிறது.

அதேசமயம் தற்போது முதுநிலை மருத்துவப்படிப்பைப் படித்து வருகின்ற அரசு மருத்துவர்கள், பல மாதங்கள் கழித்து அவர்கள் படித்து முடித்த பிறகு பேராசிரியராக மருத்துவக் கல்லூரிகளில் இணைய வேண்டும் என்பதற்காக, ஏற்கெனவே எம்.ஆர்.பியில் இணைந்து DPHல் உள்ளவர்களை DME ல் மருத்துவக் கல்லூரிக்கு மாற்றுவதைத் தடுப்பது, தற்போது நடக்க வேண்டிய பேராசிரியர் பதவி உயர்வைக் காலதாமதப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் அரசும் ஈடுபடுகின்றது.

பொதுமக்கள் நலன் கருதி, காலத்திற்கேற்ப அரசு மருத்துவமனைகள் திறம்படச் செயல்பட உரிய கொள்கை முடிவுகளை தமிழக அரசு எடுக்க வேண்டும்.

◆ அரசு மருத்துவர்களுக்கு ஒன்றிய அரசு போல் கால முறை பதவி உயர்வு வழங்க வேண்டும். அவர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்.

◆ 24 மணி நேர வேலை கைவிடப் பட வேண்டும். எட்டு மணி நேரம் மட்டுமே வேலை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

◆ பணி நேரத்தில் பணிக்கு வராத மருத்துவர்கள், மருத்துவத்துறை பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

◆ அரசு மருத்துவமனைகளில் ஆய்வக வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

◆ அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளாத அறுவை சிகிச்சைத் துறைகளின் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

◆ முதலமைச்சர் காப்பீடு அட்டை இருந்தால் தான் அறுவை சிகிச்சை செய்யப்படும் என்ற நிலையை கைவிட வேண்டும்.

◆ அரசு மருத்துவமனைகளில் அனைத்து சிகிச்சைகளும், மருத்துவப் பரிசோதனைகளும் இலவசமாக செய்யப்பட வேண்டும். இவற்றின் மூலமே, தேசிய மருத்துவ ஆணையத்தின் விதிமுறைகளை, அரசு மருத்துவக் கல்லூரிகள் முழுமையாக நிறைவேற்ற முடியும்.

◆ மக்கள் நல்வாழ்வுத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை , தி.மு.க உறுதி அளித்தது போல் மூன்று மடங்காக உயர்த்திட வேண்டும்.

◆ தமிழக அரசு மருத்துவமனைகளில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக, தற்காலிகமாக பணிபுரிபவர்களுக்கு பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும்.

◆ நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவத் துறை பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

◆ தற்காலிக அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதை கைவிட வேண்டும்.

◆ புதிய மருத்துவமனைகள், பல் நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள்,துவங்கும் போது, அவற்றிற்கான மருத்துவர்களையும், பணியாளர்களையும் நியமிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாதது பெரும் பாதிப்பை பல தரப்பினருக்கும்,நோயாளிகளுக்கும் ஏற்படுத்துகிறது.

◆ தமிழக மக்கள் தொகையில் ஒரு கோடி பேர் வசிக்கும் சென்னையில் உள்ள சென்னைமாநகராட்சிமருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் இல்லாததன் காரணமாக இம்மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்குச் சரியான சிகிச்சை வழங்க முடியாத நிலை தொடர்ந்து பல ஆண்டுகளாக நீடிக்கிறது. எனவே, சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளை, சென்னையில் உள்ள சென்னை மருத்துவக் கல்லூரி, கீழ்பாக்க மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரிகளுடன், அதாவது மருத்துவக் கல்வி இயக்குனர் இயக்குனரகத்துடன் இணைத்துப் பொதுமக்களுக்குச் சிறப்பான சேவையாற்ற வேண்டும்.

மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படுவதால் மாவட்ட மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளாக மாற்றப்படுவதால், சுருங்கி வரும் DMS மருத்துவமனைகளை அருகே உள்ள DME மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் DMS இணைத்துப் பொது மக்களுக்குச் சிறப்பான சேவை வழங்க வேண்டும்.

◆ இன்றைய நிலையில் அரசின் தேவை கருதி 2024 மற்றும் 2025 எம்ஆர்பி தேர்வில் வெற்றி பெற்று பணியில் சேர்ந்துள்ள முதுநிலை மருத்துவம் படித்த மருத்துவர்கள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பணிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

◆ கேரளா போன்ற மாநிலங்களில் உள்ளது போல், தமிழக அரசின் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத் துறையில் பணியில் சேர்ந்து, முதுநிலை மருத்துவப் படிப்பை முடித்து மருத்துவக் கல்வித் துறைக்குள்ளே வரும் பொழுது, CML seniority உடன், DME ல் Post Speciality seniority list என்று உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

◆ CML சீனியாரிட்டி அடிப்படையில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள அனைத்து நிர்வாகப் பதவிகளையும் வழங்கிட வேண்டும்.

◆ முதுநிலை மருத்துவம் படித்த அனுபவத்தின் அடிப்படையில் போஸ்ட் ஸ்பெஷாலிட்டி சீனியாரிட்டி அடிப்படையில், இணை பேராசிரியர், துணைப் பேராசிரியர், பேராசிரியர் பதவி நியமனங்களை உடனடியாக செய்திட வேண்டும்.

◆ ஐந்தாண்டுப் பணி முடித்த உதவிப் பேராசிரியர் அனைவருக்கும், இணைப் பேராசிரியர் பதவிகளை Paper promotion வழங்கிட வேண்டும்.

◆ எம்.ஆர்.பி 2025 தேர்வில் தேர்ச்சி பெற்று, பணியில் சேராதவர்கள் 380 க்கும் மேற்பட்டோருடைய பெயர் பட்டியல் வெளி வந்துள்ளது. இன்னும் பல காரணங்களால் பலர் பணியில் சேரவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்து, காத்திருப்புப் பட்டியலில் உள்ள மருத்துவர்களுக்கு, கவுன்சிலிங் நடத்தி, பணியாணை வழங்க வேண்டும்.

◆ MRB 2025 தேர்வு முடிவுகளில் முழுமையான தரவரிசைப் பட்டியல் மற்றும் கம்யுனிட்டி தரவரிசைப் பட்டியலை முழுமையாக வெளிப்படைத்தன்மையுடன் கால தாமதம் இன்றி வெளியிட வேண்டும்.

◆ தமிழகம் முழுவதும் பல அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட, வட்டார, ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளில், பல் மருத்துவர்கள் அவசியப்படுகிறார்கள். எனவே, அண்மையில் நடந்த 47 பல் மருத்துவர்களுக்கான எம்.ஆர்.பி இடங்களைக் கூடுதலாக உயர்த்திட வேண்டும். அனைத்துத் தற்காலிகப் பல் மருத்துவர்களுக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும்.

◆ முதுநிலை மருத்துவப் படிப்புகளை முடித்த, அரசுசாரா தனியார் மருத்துவர்களுக்கு, ஒப்பந்தப் பத்திரக் கட்டாய தற்காலிக வேலை வழங்குவதற்காக அண்மையில் கவுன் சிலிங்கில் நடைபெற்ற குளறுபடிகள் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. டிம், எம்.சி.எச் படித்த முன்னுரிமைப் பட்டியலில் மூத்த மருத்துவர்களுக்கு DMS துறையின் கீழ் உள்ள மருத்துவமறைகளும், எம்.டி,எம்.எஸ் படிப்பை முடித்த இளம் மருத்துவர்களுக்கு DME துறையில் மருத்துவக் கல்லூரிகளில் பணி வழங்கி இருப்பதும் அதிர்ச்சி அளிக்கிறது. இதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறையின் நிர்வாகக் குளறுபடிகளும், மெத்தனப் போக்கும், வெளிப்படைத் தன்மையற்ற செயல்பாடுகளுமே காரணம்.

◆ கேரளா, கர்நாடகம், தெலுங்கானா மாநிலங்களில் உள்ளது போல் அரசு சாரா மருத்துவர்கள், ஒப்பந்தப் பத்திரப் பணி செய்ய வேண்டியவர்களுடைய சீனியாரிட்டி லிஸ்ட்டை நீட் மதிப்பெண் அடிப்படையில் உருவாக்கிட வேண்டும். ஒற்றைச் சாளர முறையில் இணைய வழியில் கலந்தாய்வு நடத்த வேண்டும். சீனியாரிட்டி லிஸ்ட்டைத் தமிழகத்தில் உள்ளது போல் பிறந்த தேதி அடிப்படையில் உருவாக்கிடக் கூடாது.

◆ கவுன்சிலிங்கிற்கு முதல் நாளே, DPH, DMS, DME இயக்கங்களில் உள்ள காலிப்பணியிடங்கள் வெளி யிட வேண்டும். அதன் அடிப்படையில் கலந்தாய்வில் முதல் ரேங்க் முதல் இறுதி ரேங்க் வரை உள்ளவர்களுக்கு, காலிப் பணியிடங்களில், அவர்களுக்கு விருப்பமான இடங்களைத் தேர்வு செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். அனைத்துக் காலிப்பணியிடங்களையும், வெளிப்படைத் தன்மையுடன் அனைவருக்கும் காட்ட வேண்டும்.

◆ பதவி உயர்வு, பணிவழங்கல் போன்றவற்றில் நடைபெறும் கவுன் சிலிங்கை வெளிப்படைத்தன்மையுடன், காலதாமதமின்றி தமிழ்நாடு அரசு நடத்திட வேண்டும்.

தொடர்புக்கு: 9940664343

# கார்ல் மார்க்சுக்குச் சிலை முதல்வர் ஸ்டாலினின் பேரறிவிப்பு!

**கார்ல் மார்க்சுக்குச் சிலை வைப்பது குறித்து தோழர் முத்தரசன் ஜனசக்தியிலே (மே 11–17) 'தன்னிகரில்லா பேரறிஞருக்குத் தலைநகரிலே சிலை' என்று தலைப்பிட்டுத் தம் தோழர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். கார்ல் மார்க்சைத் தத்துவஞானி என்றோ, மெய்ஞானி என்றோ அவர் அதில் குறிப்பிடவில்லை.**

க.திருநாவுக்கரசு,
திராவிட இயக்க ஆய்வாளர்

'தத்துவஞானி' 'மெய்ஞானி' என்று குறிப்பிட்டால் அது கீழ் நாட்டுத் தத்துவ இயலின் வழிகாட்டிகளுக்குப் பெரும்பாலும் அத்தகைய அடைமொழிகளைச் சேர்த்து விடுகிறார்கள். தோழர் முத்தரசன் மாமேதையைத் தனித்துக் காட்டியது சிறப்புக்குரியதாகும். அவரை இன்னும் சிறந்த அடைமொழிகளால் தெரிந்தெடுத்துப் பாராட்ட வேண்டும். அத்தகைய அகன்றாழ்ந்த ஒட்பம் உடையவர்.

இப்படித் தோழர் முத்தரசன் எழுதுவதற்குக் காரணம் முதல்வர் மு.க.ஸ்டாலினின் கார்ல் மார்க்சு சிலை வைப்பு பேரறிவிப்புதான். முதல்வர் ஸ்டாலின் வாழையடி வாழையென வந்ததொரு திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர். அதாவது பொதுமை நாட்டமுள்ள கொள்கையினர் வழி உடையவர் ஸ்டாலின். அதனை இங்கே சில வரிகளில் சொல்ல விரும்புகின்றோம்.

கம்யூனிஸ்ட் அறிக்கையின் ஒரு சில பகுதிகளைப் பெரியாரின் குடிஅரசு முதன் முதலில் தமிழில் வழங்கியது. இதே காலகட்டத்தில் மதமும் லெனினும் வெளியாயிற்று. பெரியார் பிரிட்டிஷார் கலங்கும் அளவுக்குப் பொதுவுடைமைப் பிரச்சாரத்தைச் செய்தார்.

ஒரு கட்டத்தில் பொதுவுடைமைக் கொள்கைக் கொண்ட தென்னிந்தியர் சமதர்மக் கட்சி எனும் அமைப்பைத் தொடங்கும் அளவுக்குப் பெரியார் சென்றார். பெரியாரின் முழக்கம் 'புரட்சி பொங்குக; பொதுவுடைமை ஓங்குக !' (குடி அரசு 18.12.1932) என்பதாகப் பதிவுகள் பேசுகின்றன.

அறிஞர் அண்ணாவோ தம் கல்லூரி நாள்களிலேயே மார்க்சைப் பயின்று இருந்தார். அவர் மாக்சியத்தைப் பயின்று கொண்டிருந்தார் என்பதை மூன்று புள்ளிகளில் சொல்ல விரும்பு கின்றோம். அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கத்தின் பகுதிகளில் உள்ள புள்ளிகள் இவை.

(1) "பொதுவுடைமை என்பது லெனினிசம், லெனினிசம் என்பது மார்க்சிசத்தின் செயல்வடிவம். செயலில் இறங்காமல், அறிவுரை மட்டுமே வழங்கும் வாய்ச்சொல் வீரர்கள் வேண்டுமானால் மார்க்சை ஒரு கனவு காணும் அரசியல்வாதி என்றும் கேடு விளைவிக்கும் பொருளாதாரவாதி என்றும் வர்ணிக்கலாம். சிலர் அவரைப் புரட்சியின் மொத்த உருவம் என்கின்றனர், உழைப்பவர் உலகமோ அவரைப் புனிதத்தன்மை உடையவர் என்கிறது அவரது "மூலதனம்" என்கிற படைப்பும் "பொதுவுடைமை அறிக்கை" என்கிற படைப்பும் பாட்டாளி மக்களுக்கான இரண்டு வழிகாட்டு ஆவணங்கள். மார்க்சின் இந்த இனிய நம்பிக்கையூட்டும் கீதத்தை மீண்டும் மீண்டும் கேட்டுத் தொழிலாளி பித்தனாகி விட்டான். அது அவனைப் பூதாகரமாக உருவெடுக்க வைத்து தாண்டவமாட வைத்தது. அவன் முதலாளித்துவம் என்கிற கொடூரனை முறியடித்தான்."

(2) "கார்ல் மார்க்சு முதலாளித்துவத்தின் தீமைகள் பற்றிய பயங்கரமான தெளிவான உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். ஜீன் ஜேக்கு ரூசோவின் "சமூக உடன்படிக்கை" எவ்வாறு விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்கிற கோட்பாட்டிற்கு வழிவகுத்ததோ, அதே போன்று மார்க்சின் "மூலதனம்" வழிவகுத்த 'மிகுதிமதிப்பு' என்கிற கருத்தியல் திட்டம் பல்வகையான சமதருமம் மலர்ந்திட முக்கிய ஆதாரமாக உள்ளது. மார்க்சு ஒன்றும் இல்லாததற்குப் புகழ் அடைந்து விடவில்லை."

(3) "நிலம் உழைப்பு மூலதனம் மற்றும் அமைப்பாண்மை ஆகிய நான்கும் உற்பத்தியின் இயக்கிகள் என்று அனைத்து அடிப்படைப் பொருளாதார நூல்களும் நமக்கு உணர்த்துகின்றன. உற்பத்திக்கு உழைப்பு எந்த அளவுக்குக் கட்டாயத் தேவையோ, அதே அளவுக்கு மூலதனமும் கட்டாயத் தேவை என்பது உண்மைதான். ஆனால் இவற்றில் எது அதிக முக்கியத்துவம் பெறத் தகுதி படைத்தது என்பது தான் சிக்கல்."

இப்படி அறிஞர் அண்ணா தமது கல்லூரி நாள்களில் எழுதிய கட்டுரையில் பொதுவுடைமையைப் பற்றி எழுதியுள்ளதை மேலே சிலவற்றை தந்து இருக்கின்றோம்.

அறிஞர் அண்ணா திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்தபோது அவர் நடத்தி வந்த திராவிட நாடு இதழில் (09.11.1947)

**கேள்வி:** கம்யூனிஸ்ட் ஜீவாவோடு நீங்கள் ஏன் ஒத்துழைக்கிறீர்கள்?

**பதில்:** அவருடன் அல்ல, அவரும் அவரது கட்சியும் கூறி வரும் பொருளாதாரக் கோட்பாடுகள் திராவிடர் கழகத்தாருக்கு உடன்பாடு. ஆகவே அந்தக் கோட்பாடுகளைப் பொறுத்தவரையிலே ஆதரவு காட்டுகிறோம் என்று கூறியிருக்கிறார்.

அறிஞர் அண்ணா இருக்கும் வரையும் பொதுடைமைக் கருத்துக்கு ஆதரவாகத்தான் இருந்து வந்தார். அது குறித்து பல செய்திகளைப் பதிவானவற்றிலிருந்தே சொல்லலாம்.

பொதுவுடைமைக் கொள்கையை முதன் முதலில் தென்னிந்தியாவில் பரப்பிய சிங்கார வேலரைச் 'சிந்தனைச் சிற்பி' என எழுதி சிறப்பித்தார், அறிஞர் அண்ணா.



கலைஞர், "நான் பெரியார், அண்ணா ஆகியோரின் அறிவார்ந்த மேடைப்பேச்சுகளைக் கேட்காமலும் அவர்களைச் சந்திக்காமலும் இருந்திருந்தால் நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகியிருப்பேன்" என்று பேசினார்.

கார்ல் மார்க்சின் 'கேப்பிடலை' தமிழில் மொழிபெயர்க்க கலைஞரின் தி.மு.க. அரசு ரூ. 5 இலட்சம் நன்கொடையாக வழங்கியது. ஜமதக்னி அதைத் தமிழில் முழுவதுமாக மொழி பெயர்த்தார். இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் 'கேப்பிடல்' 'மூலதனம்' எனும் தலைப்பில் வெளியாயிற்று. இதற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தவர் கலைஞர்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பல பாடல்கள் பொதுவுடைமைக் கொள்கையின் கருத்தை வெளிப்படுத்தி இருக்கின்றன. ஜனசக்திக்கு என்று 1937இல் பாடல் புனைந்து வழங்கியவர் பாரதிதாசன். ஒரு கவிதையில் 'பொதுவுடைமைக்குப் பகைவனா? நான் !' என்று கேட்டு இருப்பார்.

இப்படித் திராவிட இயக்கம் பொதுவுடைமைக் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்குக் காரணமாக இருந்து இருக்கிறது.

இந்த வரிசையைத் தொடர்ந்து நமக்கு ஸ்டாலின் கிடைத்து இருக்கிறார். அந்த வரிசை மாறாமல் முதல்வராக இருந்து சட்டமன்றத்தில் கார்ல் மார்க்சுக்கு சிலை வைக்கப்படும் என்று பேரறிவிப்பு செய்து இருக்கிறார். திராவிட இயக்க மரபு அப்படி அதை ஸ்டாலின் செயலின் மூலம் எடுத்துக்காட்டி இருக்கிறார். இந்த அறிவிப்பினால் அவரின் உயரம் மேலும் அதிகமாயிற்று.

கார்ல் மார்க்சுக்கு எங்கே சிலை வைக்கிறார்கள்? கன்னிமாரா நூலகத்தின் முன்பு; மிக பொருத்தமான இடம். மிக அருமையான இடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்வு செய்து இருக்கிறார். அவரை நாம் பாராட்டுகின்றோம். நன்றிகளைக் குவிக்கின்றோம். 'சல்யூட்' செய்கின்றோம்.

இலண்டன் நூலகத்தின் இருண்ட அறை களிலே அமர்ந்து எல்லா ஏடுகளையும் புரட்டிப் பார்த்து படித்து விஞ்ஞானப் பூர்வமான முடிவை வெளியிட்டவர் அவர்.

'உலகைப் புரிந்து கொள்வது மட்டும் சிந்தனையாளனின் பணி இல்லை. உலகை மாற்றி அமைப்பதும் அவனது பணியே' எனப் புது நெறியை உலகுக்கு உணர்த்தியவர் அவர். ஆகவே பெரும் படிப்பாளியும் மேதையுமான கார்ல் மார்க்சு சிலை எழும்பூர் கன்னிமாரா நூலகத்தின் முன் அமைவது பெருமையும் பெருமிதமும் கொள்ளத்தக்கச் செய்தி ஆகும்.

திராவிடப் பேரியக்கத்தின் அரசியல் பிரிவு தி.மு.க. அது இளைஞர்களுக்கு 'திராவிட இயக்கத்தின் அரசியல் கல்வியை' புகட்டி வருகிறது. இன்னொரு பிரிவினர் 'திராவிடப் பள்ளியை' நடத்துகிறார்கள். தொடர்ந்து இளைஞர்கள் மொய்த்துக் கொண்டே இருக்கிறார்கள். கட்டுரையாளரான நாம் தி.மு.க. இளைஞர்களுக்கு ஒரு கோரிக்கையை முன் வைக்க விரும்புகின்றோம்.

திராவிட இயக்கம் பொதுவுடைமை கொள்கை வளருவதற்கு செய்த பணிகளின் முழுப் பரிமாணத்தையும் இக்கட்டுரையில் நாம் சொல்லவில்லை. ஆனால் அறிஞர் அண்ணா தமது கட்டுரையில் இரு ஆவணங்களைக் குறிப்பிடுகிறார் அல்லவா?

(1) கம்யூனிஸ்ட் அறிக்கை

(2) கார்ல் மார்க்சின் கேப்பிடல்மூலதனம்

இந்த இரண்டை அறிஞர் அண்ணா படித்து தெளிவடைந்து 1932 இல் கட்டுரை எழுதினார். அப்போது அவருக்கு குறைவான தரவுகளே கிடைத்து இருக்கக் கூடும். இப்போது படிப்பவர்களுக்கு வசதிகள் நிரம்ப இருக்கின்றன. ஆகவே கூடுதலான செய்திகள் தி.மு.க. இளைஞர்களுக்கு அது பற்றிக் கிடைக்கக் கூடும்.

(1) கம்யூனிஸ்ட் அறிக்கையை சமதர்ம அறிக்கை என்று பெரியாரின் குடி அரசு முதன் முதலில் வெளியிட்டது.

இரண்டாவதாக இஸ்மத்பாட்சாவின் மொழிபெயர்ப்பு வெளிவந்தது.

மூன்றாவதாக ரா.கிருஷ்ணையாவின் மொழிபெயர்ப்பு வெளிவந்தது.

நான்காவதாக இரா.ஜவகரின் மொழி பெயர்ப்பு என்று நாம் படித்தோம்.

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்

## இந்த கட்டுரை குறித்து...

முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள இந்தக் கட்டுரை, மார்க்சின் மேதைமையை நன்கு விளக்குகிறது. பொதுவுடமைக் கொள்கைகளோடு திராவிட இயக்கம் ஒத்திசைந்து சென்றதையும், அந்தக் கொள்கைகளைப் பரப்புவதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்புகளையும் எடுத்துரைக்கிறது.

அண்மைக் காலங்களில் திராவிடக் கருத்தியலாளர்கள், கம்யூனிசம் என்பது ஒரு சர்வாதிகாரம் என்றும், ஜனநாயகமற்ற எதுவும் தமக்கு உடன்பாடானது அல்ல என்று பேசி வருவதை ஏற்கெனவே ஜனசக்தி இதழ்களில் எழுதி இருக்கிறோம். அவற்றில் திராவிடக் கருத்தியலும் பொதுவுடமைக் கொள்கையும் ஒன்றுக்கொன்று எதிராக வைக்கத்தக்கவை அல்ல என்பதை விளக்கி இருக்கிறோம்.

தற்போது, திராவிடக் கருத்தியலில் ஆழ்ந்த புலமை பெற்றவரும், பொதுவுடமைக் கொள்கை பற்றி ஆய்வு செய்து நூல்கள் எழுதியவருமான திராவிட இயக்க வரலாற்று ஆய்வாளரான மதிப்புக்குரிய க.திருநாவுக்கரசு அவர்கள், முரசொலி இதழில் எழுதியுள்ள இந்தக் கட்டுரை தனிக் கவனம் பெறுகிறது. அதனால் அதனை இங்கு வெளியிட்டுள்ளோம்.

என்றாலும் இதில் வரும் சில கருத்துக்கள் ஜனசக்திக்கு உடன்பாடானவை என்று புரிந்து கொள்ளக் கூடாது என்பதால் இந்தச் சிறு குறிப்புகள் அவசியமாகின்றன.

1. "உலகத்தைப் புரிந்து கொள்வது மட்டும் சிந்தனையாளனின் பணி இல்லை. உலகை மாற்றியமைப்பதும் அவர் பணியே" என்ற புது நெறியை காரல் மார்க்ஸ் உணர்த்தியதாகக் கட்டுரை பேசுகிறது.

ஆனால் காரல் மார்க்ஸ் சொன்னது என்னவென்றால் "இதுவரையில் தத்துவவாதிகள் உலகம் எவ்வாறு இருக்கிறது என்று வெவ்வேறு வகைகளில் எடுத்துரைத்து விளக்க முயன்றார்கள். நாம் செய்ய வேண்டியது எல்லாம் அதனை மாற்றி அமைப்பதே" (The philosophers have only interpreted the world, in various ways. The point, however, is to change it)

இரண்டுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் உள்ளது!!

2. "உற்பத்திக்கு உழைப்பு எந்த அளவுக்குக் கட்டாய தேவையோ அதே அளவுக்கு மூலதனமும் கட்டாயத் தேவை என்பது உண்மைதான். ஆனால் இவற்றுள் எது அதிக முக்கியத்துவம் பெற தகுதி படைத்தது என்பதுதான் சிக்கல்" என்று அண்ணா எழுதியதாக கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் காரல் மார்க்ஸ் எள்முனையளவும் சந்தேகத்திற்கு இடமின்றி உழைப்புதான் முதன்மையானது, மூலதனம் உருவானதற்குக் காரணமும் உழைப்புதான் என்பதைத் தெள்ளென நிறுவி இருக்கிறார். அவரது "உபரி மதிப்பு" உரியவிவரங்களோடு அலசி ஆராய்ந்து இந்த உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது. காரல் மார்க்ஸ் இறந்தபோது இரங்கல் உரை ஆற்றிய எங்கல்ஸ், "மார்க்ஸின் மிக முக்கியமான கண்டுபிடிப்புகள், வரலாற்றுப் பொருள் முதல் வாதமும் உபரி மதிப்பும்தான்" என்று குறிப்பிட்டார். உற்பத்திக்கு முக்கியமானது உழைப்பா மூலதனமா என்பதில் பொதுவுடமைக் கொள்கைக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

– **ஆசிரியர் குழு,
ஜனசக்தி**

## நாடாளுமன்றமா? நீதித் துறையா? எது உயர்ந்தது?


மு.வீரபாண்டியன்

**உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கேட்டு 14 வினாக்களை எழுப்பி உள்ளார் குடியரசுத் தலைவர் அவர்கள்.**

முன்னர் துணை ஜனாதிபதி அவர்களும் நீதிமன்றத்தைக் கேள்விக்குள்ளாக்கினார். உச்ச நீதிமன்றம் சூப்பர் நீதிமன்றமா? என வினாவினார்.

இருவரின் கேள்விகளும் கருத்திலும் நாடாளுமன்றமா அல்லது உச்ச நீதிமன்றமா? எது உயர்ந்தது என்ற கேள்வி நிற்கிறது.

நாடாளுமன்றம், நீதித்துறை ஆகிய இரண்டையும் விட அரசியல் சாசனமே உயர்ந்தது என இருவருக்கும் தெரியும்.

இருப்பினும் அரசியல் சாசனத்தைச் சிதைக்கிற நோக்கிலேயே கேள்விகளை எழுப்புகிறார்கள். தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், சட்டமன்ற மசோதாக்கள் மீது ஆளுநர் ஜனாதிபதி முடிவெடுக்க, நீதிமன்றம் காலக்கெடு நிர்ணயித்தது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசாங்கம் தனது சட்டமன்றத்தால் மசோதாக்களை நிறைவேற்றினால் அதனை ஆளுநர்கள் கிடப்பில் போடுகிறார்கள். காலம் கடத்துகிறார்கள், அலட்சியப்படுத்துகிறார்கள். எனவேதான் நீதிமன்றம் காலக்கெடு நிர்ணயித்தது. இதனை ஏற்கிற ஜனநாயகப் பக்குவம் ஏதுமின்றி நீதிமன்றத்தைக் கேள்விக்குள்ளாக்குவது அரசியல் சாசனத்தின் மீதான தாக்குதல்தான்.

இந்திய ஜனநாயகத்தில் சூப்பர் நீதிமன்றம் ஏதுமில்லை. அதேபோல ஜனாதிபதியோ, துணை ஜனாதிபதியோ, அல்லது பிரதமரோ அரசர்கள் அல்ல.

மேலை நாடுகளில் மன்னர்களை ரிப்பான் விங்கிள் என்பார்களாம். அதாவது அளவற்ற அதிகாரம் கொண்டவர்கள். அவர்கள் தூங்கிக் கொண்டே நடப்பார்கள். தூக்கத்தில் கூட அவர்கள் சொல்வதுதான் சட்டம். அதுபோல் இந்திய ஜனநாயகத்தில் ரிப்பான் வங்கிள் என்பவர்களும் யாருமில்லை.

குடியரசுத் தலைவரோ, ஆளுநரோ, பிரதமரோ முதல்வரோ யாராகிலும் இங்கு சட்டப்படிதான் நடந்து கொள்ள வேண்டும்.

இங்கே பிரச்சனை நீதித்துறையா? நாடாளுமன்றமா? என்பது அல்ல. நீதித் துறையும் தங்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்ற ஒன்றிய அரசின் கொள்கைகள்தான் பிரச்சனை.

பாபர் மசூதி தகர்க்கப்பட்ட வழக்கில் ராமர் கோவில் கட்ட, உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை நாடு முழுவதும் கொண்டாடியது யார்? முர்முக்களும் தன்கர்களும் தானே !?

நீதிமன்றம் தங்களுக்குச் சாதகமாக இல்லை என்றவுடன் நீதித் துறையைத் தாக்குவதா?

இந்திய அரசியல் சட்டப்படி, நீதிமன்றமோ, நாடாளுமன்றமோ, ராணுவமோ ஒன்றின் தலைமேல் மற்றொன்று அமர முடியாது. இங்கு சூப்பர் பவர் ஏதுமில்லை. இந்திய ஜனநாயகம், நீதி, நிர்வாகம், பத்திரிகை, நாடாளுமன்றம் என நான்கு தூண்கள் மீது மட்டுமல்ல.

1. எதிர்க்கட்சிகள், 2. விவாத முறை எனும் சிறப்புத் தூண்களாலும் கட்டப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள், விவாத முறை இரண்டையும் கடந்து வெறும் குரல் வாக்கெடுப்பில், கைகளை உயர்த்திச் சட்டங்களை நிறைவேற்றியது. நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதல் தானே. இதன் வேடிக்கை பார்த்தது ஜனாதிபதியும், துணை ஜனாதிபதியும் தானே?

தமிழக அரசு கொடுத்த வழக்கு, மாநில உரிமைகளுக்கானது மட்டுமல்ல, ஜனநாயகத்தைச் சட்டத்தின் ஆட்சி முறைகளை ஒரு படி மேலே வளர்த்தெடுப்பது.

தமிழக அரசின் வழக்கு அதிகாரப் பரவலைக் கோருகிறது.

ஒன்றிய அரசும், துணை ஜனாதிபதியும் அதிகாரக் குவியலைக் கோருகிறார்கள். ஆளுநர்கள் நியமன வடிவம். ஆனால், முதல்வர்கள் தேர்வின் வடிவம் அதிலும் மக்கள் தேர்ந்தெடுக்கும் தேர்வின் வடிவம்.

இங்கே நியமன வடிவம் ஜனநாயகம் அல்ல என்கிற சிறிய அரசியல் பார்வை கூட துணை ஜனாதிபதிக்கோ, ஆளுனர்களுக்கோ இல்லை என்பதுதான் அதிர்ச்சி அளிக்கிறது.

இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் சிறப்பானதுதான். பல கட்சி ஆட்சி முறையும் இயங்கு முறையும் பன்முகமும் மதச்சார்பின்மையும் சிறப்பானதுதான். ஆனால் இவைகளைப் பாதுகாக்க இந்திய ஜனநாயகத்தை வளர்த்தெடுக்க வேண்டும்.

இதற்காக அனைத்துச் சட்ட வடிவ உரிமைகளையும் அரசியல் சாசனம் வழங்குகிறது. மக்கள் அதிகாரம்தான் மக்கள் ஆட்சியின் அடித்தளம்.

மக்கள் பெயரில் செல்வந்தர்களோ, அதிகார வர்க்கமோ, அரசியல் அதிகாரத்தில் அமர்ந்து விடக் கூடாது. இங்கே பெரும்பான்மைக்கும் சிறுபான்மைக்கும் சட்டம் ஒன்றுதான். சட்டத்தின் முன் அனைவரும் சமம். சமத்துவத்தின் உண்மையான பெயர்தான் ஜனநாயகம். சமத்துவத்தை நோக்கி நாடு நகர்வதுதான் எதிர்காலம்!

# நாடாளுமன்றத்து


மே.து.ரா.

**நாடாளுமன்றம், அரசமைப்புச் சட்டம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் எது உயர் உரிமை கொண்டது என்பது இப்போது பேசுபொருளாக மாறியுள்ளது.**



நாடாளுமன்றம்தான் உச்ச அளவிலான உரிமை கொண்டது என்று குடியரசுத் துணைத் தலைவர் தான் போகும் இடமெல்லாம் வலியுறுத்தி வருகிறார்.

நாடாளுமன்றமாக மாறி, உச்ச நீதிமன்றம் சட்டங்களை இயற்றிவிடக்கூடாது என்றும், அரசமைப்புச் சட்டத்தின் 142ஆவது பிரிவினைப் பயன்படுத்துவது ஏவுகணைத் தாக்குதல் என்றும் அவர் குற்றம் சாட்டிவருகிறார்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதியராக அண்மையில் பொறுப்பேற்றுள்ள பூசன் ராமகிருட்டின கவாய், இந்திய அரசமைப்புச் சட்டம்தான் உயர் உரிமை கொண்டது என்பதை உறுதி செய்ய முனைந்துள்ளார்.

நாடாளுமன்றம், நீதிமன்றம், ஆட்சி மேலாண்மை ஆகிய மூன்று அலகுகளும் தத்தமக்கான தனித்தன்மை கொண்ட உரிமைகளைக் கொண்டிருக்கின்றன என்றும், ஒன்றுக்கொன்று தத்தமது எல்லைகளுக்குள் நின்று செயல்படவேண்டும் என்றும் கருத்துக்கள் முன்மொழியப்படுகின்றன.

### சட்டப்பேரவைகளும் மேலானவை

பாரதிய சனதாக் கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் நாடாளுமன்றம்தான் உச்ச உரிமை கொண்டதாகத் தொடர்ந்து நிலைநாட்ட முயற்சித்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்தின் உயர்வினையும் மேன்மையினையும் எடுத்துக்காட்டும் இவர்கள், மாநிலச் சட்டப்பேரவைகளுக்கும் சட்டங்கள் இயற்றும் இணையான உரிமைகளும் கடமைகளும் பொறுப்புகளும் இருப்பதை மறைக்கவும் மறுக்கவும் முற்படுகின்றனர்.

மாநிலங்களின் ஒன்றியமாக உருவாகியுள்ள இந்தியாவில், அரசமைப்புச் சட்டம் தெளிவான பல வரையறைகளை வகுத்துத் தந்திருக்கிறது. நாடாளுமன்றத்துக்கு இருக்கின்ற அனைத்து வகை உரிமைகளும் கடமைகளும் மாநிலச் சட்டப்பேரவைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

1. அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்பில் முதலாவதான ஒன்றியப் பட்டியலில் உள்ள பொருள்களில், நாடாளுமன்றம் சட்டங்களை இயற்றுவது போன்று, இரண்டாவதான மாநிலப் பட்டியலில் உள்ள பொருள்களில், மாநிலச் சட்டப்பேரவைகள் மட்டுமே சட்டங்களை இயற்ற முடியும் (பிரிவுகள் 245, 246)

2. மூன்றாவதான பொதுப் பட்டியலில் உள்ள பொருள்களில் நாடாளுமன்றம், மாநிலச் சட்டப்பேரவைகள் ஆகியன சட்டங்களை இயற்றிக்கொள்ளலாம்

3. அரசமைப்புச் சட்டத்தினைத் திருத்தவேண்டுமெனில், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற வேண்டும் என்பதோடு, 50%க்கு மேற்பட்ட மாநிலச்

# சேர்ந்திசையின் நாயகன்

**வானம் நமது தந்தை**
**பூமி நமது அன்னை**
**உலகம் நமது வீடு**
**உயிர்கள் நமது உறவு**


பா.ஜீவசுந்தரி

மனிதம் போற்றும் எவ்வளவு அற்புதமான பாடல் வரிகள். இப்பாடலை எழுதியவர் கவிஞர் பூவை. செங்குட்டுவன்; அருமையான சேர்ந்திசைப் பாணியில் அமைந்த இனிமையான இசையைக் கோர்த்துக் கொடுத்தவர் தோழர் எம்.பி.சீனிவாசன். எஸ்.ஜானகி குழுவினருடன் இணைந்து பாடிய திரைப்படப் பாடல். ஆனால் காணக் கிடைக்காத திரைப்படம் ‘தாகம்’. 1972ல் ஆரம்பித்து 1974ஆம் ஆண்டு வெளிவந்த படம் இது. பரீட்சார்த்தப் படங்கள் எப்போதும் அப்படியானவை தாமே... இந்தப் படம் மட்டுமல்ல, தமிழில் மொத்தமே எட்டுப் படங்களுக்குத்தான் அவர் இசையமைத்திருக்கிறார்.

இசையுடன் மட்டும் முடிந்துவிடவில்லை இவரது பணி.

### மாணவர் தலைவராக எம்.பி.எஸ்.

நம் நாட்டின் விடுதலைப் போராட்டம் என்பது காங்கிரஸ் கட்சியுடன் மட்டும் தொடர்புடையது அல்ல; அந்த இயக்கத்துக்குள்ளேயே கம்யூனிஸ்ட்களுடனும் தொடர்புடையது. கம்யூனிஸ்ட்கள் தங்கள் வழியில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். கல்லூரி மாணவர்களிடையே மாணவர் இயக்கங்களையும் ஏற்படுத்தியதுடன் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தயங்கவில்லை.

மெட்ராஸ் பிரெசிடன்ஸி கல்லூரியில் எம்.பி.சீனிவாசன் எம்.ஓ.எஸ் அமைப்பின் தலைவராக இருந்து செயல்பட்டவர். இவரின் தலைமையின் கீழ் மாணவர் அமைப்பும் வெகுவேகமாக வளர்ந்தது. 1942 ஆகஸ்ட் மாதத்தில் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கம் மிகத் தீவிரமாக நடைபெற்றதால், காங்கிரஸின் பிரதான தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். அதன் விளைவாக நாடெங்கும் மக்கள் போராட்டமும் வெடித்தது. இதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியர்களும், மாணவர்கள் பலரும் கட்சி எடுத்த முடிவினை ஆதரித்து மீண்டும் தங்கள் கல்லூரிக்குத் திரும்பினார்கள்; கல்வியையும் தொடர்ந்தார்கள். அதனால் பிரசிடென்ஸி கல்லூரியில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கமும் மிகுந்தது.

1945ல் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் விமான விபத்தில் மரணமடைந்ததாகச் செய்திகள் வெளியாகவும் பொது மக்களும் மாணவர்களும் இணைந்து போராட்டங்களில் இறங்கினர். எம்.எஸ்.ஓ மட்டுமல்லாமல், இந்திய மாணவர் காங்கிரஸ், முஸ்லிம் மாணவர் அமைப்பு போன்றவையும் இப்போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டன. ஆங்கிலேய அரசு ஏற்படுத்திய வன்முறையின் காரணமாகப் பொது மக்களுடன், மாணவர்கள் பலரும் உயிரிழந்தனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரசிடென்ஸி கல்லூரி மாணவர்கள் அரசு விதித்த தடைகளையும் மீறி திருவல்லிக்கேணியிலிருந்து ஊர்வலம் செல்லத் துவங்கினர். ‘தி ஹிந்து’ பத்திரிகை அலுவலகத்தின் எதிரே ஊர்வலம் சென்றபோது போலீசார் மாணவர்களைத் தடுத்தனர். கலைந்து செல்லவும் வலியுறுத்தினர். ஆனால், மாணவர்கள் சாலையின் நடுவே அமர்ந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். துப்பாக்கிச்சூடு நடத்துவோம் என்ற போலீசின் எச்சரிக்கையையும் அவர்கள் புறக்கணித்தனர்.

வேறு வழியின்றி போலீசார், ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்ற மாணவர்களின் பெயரைக் குறித்துக் கொண்டதுடன், அவர்களைக் கைது செய்வதாகவும் அறிவித்தது. போலீசார் குறித்துக்கொண்ட பெயர்களில் எம்.பி.எஸ் பெயரும் இருந்தது. இதன் விளைவு, கல்லூரியிலிருந்து தற்காலிக நீக்கம், இறுதியாண்டுத் தேர்வினை எழுத

# க்கு இணையானவை மாநிலச் சட்டப்பேரவைகள்



மாநில அரசுகளின் ஆட்சி மேலாண்மையில் ஒன்றிய அரசு தலையிட வழி இல்லை.

நாடாளுமன்றம், மாநிலச் சட்டப்பேரவைகள் என்று தனித்தனியே செயல்படும் நிலை இருந்தாலும், தத்தமக்கென வழங்கப்பட்டுள்ள உரிமைகளில் பிறர் தலையீடு ஏதுமின்றி ஆட்சி செய்ய அரசமைப்புச் சட்டம் இடம் தந்திருக்கிறது.

எதிர்பாராத நெருக்கடி நிலைமைகளில் கூட, நாடாளுமன்ற மாநிலங்களவையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஒப்புதல் பெறாமல், ஒன்றிய அரசு அல்லது நாடாளுமன்றம் மாநில உரிமைகளில் தலையிட இயலாது.

சட்டப்பேரவைகளும் ஒப்புதலைத் தரவேண்டும்

4.குடியரசுத்தலைவரைத்தேர்ந்தெடுக்கும் உரிமை, நாடாளுமன்றத்துக்கு இருப்பது போன்று, மாநிலச் சட்டப்பேரவைகளுக்கும் இருக்கிறது

5. அந்தந்த மாநிலங்களில் ஆட்சியாளர்களாக அமையும் அமைச்சரவைகளைக் கட்டுப்படுத்தும் உரிமை மாநிலச் சட்டப்பேரவைகளுக்குத் தரப்பட்டுள்ளது

6. மாநிலங்களின் செலவுகளுக்கு வரி பெறும் உரிமையும் இருக்கிறது

7. நாடாளுமன்றத்தின் சட்டம் இயற்றும் உரிமைகளில் மாநிலச் சட்டப்பேரவை எப்படித் தலையிட முடியாதோ அதைப் போன்று, மாநிலச் சட்டப்பேரவைகளின் சட்டம் இயற்றும் உரிமைகளில் நாடாளுமன்றம் தலையிட இயலாது.

8. ஒன்றிய அரசின் ஆட்சி மேலாண்மையில் எப்படி மாநில அரசுகள் தலையிட இயலாதோ அதேபோன்று,

## மாநில உரிமைகளைப் பா.ச.க.வினர் ஏற்கவில்லை

இந்த வகையில் நாடாளுமன்றத்துக்கு இணையாக உரிமைகளையும் கடமைகளையும் பொறுப்புகளையும் தன்னாட்சி, தனியாட்சி என்ற வகையில் பெற்றிருக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் சட்டப்பேரவைகளின் மேல் நிலையினை ஒன்றிய அமைச்சர்களும் பா.ச.க.வினரும் மதிக்க முன்வரவில்லை.

நாடாளுமன்றத்திற்கு இருப்பது போலவே, மாநிலச் சட்டப்பேரவைகளுக்கும் அரசமைப்புச் சட்டத்திலேயே முழுமையான இறையாண்மை வழங்கப்பட்டிருக்கும்போது, அதனை ஏற்றுக்கொள்ள அல்லது அதனைக் குறிப்பிட்டுக் கூற பா.ச.க.வினர் விரும்பவில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாமா? என்ற வினா எழுப்பும் துணைக் குடியரசுத் தலைவரும் பா.ச.க.வினரும், நாடாளுமன்றத்துக்கும் மேலாகக் குடியரசுத் தலைவருக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன என்று எப்போதும் கூறவில்லை.

ஆனால், தேர்ந்தெடுக்கப்படாமல் ஒன்றிய அரசால் பணியமர்த்தப்படும் மாநில ஆளுநருக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டப்பேரவையின் சட்ட வரைவுகளை நிறுத்தி வைக்கும் உரிமை உள்ளிட்டு, வேறு பல உரிமைகளும் இருப்பதாக வெளிப்படையாகவே கூறி வருகின்றனர்.

முற்றும் முரணாகவே அவர்களது கருத்துக்கள் வெளிப்படுவதைக் காணலாம்.

நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம், மாநிலச் சட்டப்பேரவைகள் ஆகிய அனைத்தையும் முழுமையாகக் கட்டுப்படுத்துகின்ற மேல்நிலையினை அரசமைப்புச் சட்டம் மட்டுமே பெற்றிருக்கிறது என்பதை எவரும் மறுக்கவில்லை.

உச்ச நீதிமன்றத்திற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் சில கடமைகளையும் பணிகளையும் பொறுப்புகளையும் வழங்கியிருக்கிறது. அவற்றில், அடிப்படையான இரண்டு கடமைகள்:

1. அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகளுக்கு விளக்கம் தரும் உரிமை

2. நடுநிலையுடன் நீதியினை நிலைநாட்டவேண்டிய அளவில் சட்டங்களில் இடைவெளிகள் இருந்தால், அவற்றை இட்டு நிரப்பி நீதியினை வழங்கப் பிரிவு 142 வழிவகை செய்கிறது.

தமிழ்நாடு அரசு தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்த இரண்டு பணிகளையும் சேர்த்துச் செய்திருப்பதுதான் வரவேற்பினைப் பெற்றிருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தில் ‘முடிந்த அளவு கூடிய விரைவில்’ என்றிருக்கின்ற சொற்களுக்கு, ஆண்டுக் கணக்கில் என்று பொருள் காண முடியாது என்பதைச் சுட்டிக்காட்டி கால அளவினைக் குறிப்பிட்டு விளக்கம் தந்துள்ளது உச்ச நீதிமன்றம்.

இதைப் போன்று, மீண்டும் நிறைவேற்றப்பட்ட சட்ட வரைவுகளைக் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பி வைத்திருப்பதைச் செல்லாது என்று அறிவித்துள்ளது. உச்ச நீதிமன்றம் விளக்கம் கொடுத்த கால அளவான மூன்று திங்கள் என்பது நிறைவடைந்துவிட்டதால், அவை ஆளுநர் ஒப்புதல் பெற்ற சட்டங்களாகக் கருதி 142ஆவது பிரிவின்கீழ் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மாநில அரசுகளை விருப்பம் போலக் கலைக்கும் நிலையினை மாற்றிய பொம்மை தீர்ப்புப் போன்று, இந்தத் தீர்ப்பும் விலக்காக உச்ச நீதிமன்றத்திலிருந்து வந்திருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

## உச்ச நீதிமன்றம் காக்கவில்லை

மாநிலச் சட்டப்பேரவைகளையும் மாநில அமைச்சரவைகளையும் ஒன்றிய அரசு தங்களுக்குக் கீழ்ப்பட்ட அடிமை அமைப்புகளாகக் கருதிவருவதை ஏற்று உறுதி செய்கின்ற பணிகளைத்தான் உச்ச நீதிமன்றம் தொடர்ந்து பல ஆண்டுகளாகச் செய்து வருகிறது என்று தயக்கமின்றிக் கூறிவிட முடியும்.

அரசமைப்புச் சட்டம் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் குழப்பம் இல்லாத சொற்களில் வகுத்துத் தந்துள்ள மாநிலச் சட்டப்பேரவைகளுக்கான உரிமைகளையும் மாநில அமைச்சரவையின் பொறுப்புகளையும் சீர்குலைக்கும் வகையிலான ஒன்றிய அரசின் நேரடியான செயல்பாடுகளுக்கும் ஆளுநர் வழியிலான

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# ன் எம்.பி.சீனிவாசன்

விடாமல் தடுத்தல் என மாணவர்களின் போராட்டங்கள் தொடர்ந்தன.


அத்துடன் நில்லாமல், 1946 கப்பற்படைப் புரட்சிக்கு ஆதரவாகவும் மாணவர்கள் திரண்டனர். அதே ஆண்டில் ரயில்வே தொழிலாளர் போராட்டம், அதில் துப்பாகிச்சூட்டில் பலியான தோழர்களுக்கு ஆதரவான போராட்டம், மெட்ராஸ் மாநகராட்சி ஊழியர்கள் போராட்டம் என அனைத்திலும் தீரமுடன் பங்கேற்றனர். இவற்றில் எல்லாம் எம்.பி.எஸ் பங்கும் இருந்தது.

## எம்.பி.எஸ்.சின் கலை இலக்கியப் பங்களிப்பு

நாடு விடுதலை அடைந்ததற்குப் பிறகு கலை இலக்கியத்தின் பால் எம்.பி.எஸ்.சின் கவனம் முழுமையாகச் சென்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு 1953, டிசம்பர் 27ல் மதுரையில் தொடங்கியது. 1954 ஜனவரி முதல் தேதி, மாபெரும் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அருணா ஆசஃப் அலி தலைமையேற்று நடத்தினார். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமைந்த பாடலை எம்.பி.எஸ். தன் இனிய குரலில் பாடியதுடன், அடுத்து ‘பாரதியார் வாக்கு’ என்னும் இசை நாடகத்தையும் நடத்தினார். அதில் பாரதியாராக நடித்தவரும் அவர்தான்.

பின்னர் இந்திய அளவிலும் எம்.பி.எஸ் இயங்க ஆரம்பித்தார். அதற்கான துவக்கம் இந்திய மக்கள் நாடக மன்றம் (Indian People's Theatre Association) 'இப்டா' IPTA வில் ஆரம்பமானது. அகில இந்திய அளவில் நாடகக் கலைஞர்களை ஒருங்கிணைத்து உருவானது. அங்கிருந்துதான் நிமாய் கோஷுடன் நட்பும் தோழமையும்

**எம்.பி.சீனிவாசன் நூற்றாண்டு**



தொடர்ந்தது. பல்வேறு மாநிலத்தைச் சார்ந்த கலைஞர்களுடன் பழகியதன் விளைவே இசையின் வடிவமாக மாறியது. அதுவும் சேர்ந்திசை என்பதும் அங்கிருந்து பெறப்பட்டதுதான்.

Madras Youth Choir என்னும் சேர்ந்திசைக் குழு சென்னையில் பிரபலமானதற்கும் அவரது இசை மீதான ஆர்வமே என்றால் மிகையில்லை. இக்குழுவினை 1971ஆம் ஆண்டில் ஆரம்பித்தவர்; இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் இந்தச் சேர்ந்திசைக் குழு பங்கேற்றுப் பாடியிருக்கிறது. இசைக்கருவிகளின் துணையின்றிப் பாடக்கூடிய சேர்ந்திசைக் குழுக்களையும் இவர் பிரபலப்படுத்தினார். வெறும் குரலிசை மட்டுமே இதில் பிரதானம் என்பதுவும் குறிப்பிடத்தக்க ஒன்று.

## திரை இசையில் தனித்துவம்

திரைப்படங்களுக்கு அவர் இசையமைத்தபோதும் அதிலும் தனக்கென ஒரு தனி பாணியை அவர் ஏற்படுத்தினார் என்றும் கூறலாம். அவரது இசையில் மென்மையும்நளினமும்இழையோடும். அவர் இசையமைத்த படங்களின் பாடல்களைக் கேட்டு ரசித்தவர்களுக்கு அது நன்கு புலப்படும். எம்.பி.எஸ். நல்ல பாடகரும் கூட. பாரதியின் பாடல்களை எப்போதும் உணர்வு பொங்கப் பாடக்கூடியவர்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் எழுதிய ‘பாடசாலை போக வேண்டும்’ பாடலுக்கும் இசையமைத்தவர் எம்.பி.எஸ். அகில இந்திய வானொலி வெளியீடாக அந்த இசைத்தட்டு வெளிவந்தது.

தோழர் பாலதண்டாயுதம் விமான விபத்துக்குப் பலியானபின், அவர் நினைவாக ‘தாமரை’ இதழில் கவிஞர் நவபாரதி ‘கோடிச் சூரியனில்...’ என்ற கவிதையை எழுதினார். இதற்கு இசையமைத்துப் பாடலாக்கியவர் தோழர் எம்.பி.எஸ்.

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் எழுதிய ‘சின்னச் சின்ன மூக்குத்தியாம்’, ‘தென்னங்கீற்று ஊஞ்சலிலே’, பாடல்களுக்கு இசையமைத்ததன் வாயிலாகத் தமிழ்த் திரையுலகில் நுழைந்தார். 1960 வெளியான இப்படத்தின் (பாதை தெரியுது பார்) கதாநாயகனாக அறிமுகமானவர் சத்தியநாதன் என்ற ரயில்வே தொழிலாளத் தோழர். (அவரே பின்னாளில் நடிகராக, இயக்குநராக மாறிய கே.விஜயன்) ஜெயகாந்தனின் பங்களிப்பும் இப்படத்துக்கு இருந்தது. தோழர்கள் ஒருங்கிணைந்து கூட்டு முயற்சியாகத் தயாரிக்கப்பட்ட படம் என்பதால் இந்தப் பணியை எம்.பி.எஸ். ஏற்றுக்கொண்டார். அதன் பிறகும் கே.விஜயன் இயக்கிய ஆரம்ப காலப் படங்களுக்கும் இசையமைத்தார். பெரும் வியாபாரப் படங்களில் பணியாற்ற அவர் விரும்பவில்லை. சுயமரியாதையே அதற்கு முக்கியக் காரணம்.

மலையாளத்தில் ஏறக்குறைய 60 படங்களுக்கு இசையமைத்தவர்; இதில் பல படங்கள் விருது பெற்றவை. அதிலும் பல படங்களுக்குப் பின்னணி இசை மட்டுமே அமைத்தவர். தேசிய விருது பெற்ற 'அக்ரஹாரத்தில் கழுதை' படத்தின் பிரதான பாத்திரமான பேராசிரியர் வேடத்தில் நடித்திருக்கிறார்.

திரைப்படங்களுக்கான இசையமைப்பில் முக்கியப் பங்கு வகிக்கும் இசைக்கருவிகள் வாசிப்பவர்களுக்கான தொழிற்சங்கம் அமைப்பதிலும் இவரின் பங்களிப்பு இருந்தது.

திரைஇசையமைப்பாளராகமட்டும்இவரை வகைப்படுத்திவிட இயலாது. சேர்ந்திசை என்ற வடிவத்தையும் இவர் பரவலாக்கினார். கம்யூனிச இயக்கத்தின் மேடைகளிலும் இவரது சேர்ந்திசைக் குழுவினர் அற்புதமாகப் பாடிச் சிறப்பித்திருக்கிறார்கள். ஒரே சீராகக் குறிப்பிட்ட இடைவெளிகளில் தங்கள் குரல்களால் இன்னிசை கீதம் இசைத்திருக்கிறார்கள் எம்.பி.எஸ். குழுவினர். சேர்ந்திசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காகத்தன்இசைக்குழுவினருடன் 1988 ஆம் ஆண்டு லட்சத்தீவுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். ஆனால், அவர் உயிருடன் தன் தாய்நாட்டுக்குத் திரும்பவில்லை. சேர்ந்திசையை எந்த அளவுக்கு நேசித்தாரோ அதேபோல் இசைப்பயணத்தின் ஊடே தன் உயிரையும் அர்ப்பணித்தார். உயிருடன் சென்றவர் வெற்று உடலாக மட்டுமே திரும்பினார். எம்.பி.எஸ். சேர்ந்திசைக்கெனவே தன் வாழ்க்கையை ஒப்படைத்தார் என்றும் கூறலாம்.

**தொடர்புக்கு: 9789913810**

## தொழிலாளர் விரோதக் கொள்கைகளைக் கைவிட வலியுறுத்தி

# அனைத்துத் தொழிற்சங்கங்கள் கண்டன ஆர்ப்பாட்டம்













ஒன்றிய மோடி அரசு தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளைக் கைவிட வேண்டும், அனைவருக்கும் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூபாய் 26,000 ஆக நிர்ணயம் செய்ய வேண்டும், பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும், குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் ரூபாய் 9000 ஆக நிர்ணயம் செய்ய வேண்டும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், விவசாயிகளின் விளைப் பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையைச் சட்டமாக்க வேண்டும், புதிய மின்சாரச் சட்டம், புதிய மோட்டார் வாகனச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட், தினக்கூலி முறைகளில் ஆட்கள் நியமனம் செய்வது கைவிடப்பட வேண்டும், 100 நாள் வேலைத் திட்டத்தின் நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டும், அங்கன்வாடி, ஆசா, மக்களைத் தேடி மருத்துவம், சத்துணவு பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், காலமுறை ஊதியம் வழங்கவேண்டும், நல வாரியங்களைச் சீர்குலைக்கக் கூடாது என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தி அனைத்துத் தொழிற்சங்கங்கள் சார்பில், நாடு தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் 20.5.2025 அன்று நடைபெற்றது.

**நெல்லை:** நெல்லை வண்ணார்பேட்டை ரவுண்டானாவில் எல்பிஎப் தர்மன் தலைமையில், ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் விளக்கவுரை ஆற்றினார். ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன், என்.பிஷேக், சுந்தரம், சபியாள், முத்துகிருஷ்ணன், சுரேஷ், உலகநாதன், வெடி கண்ட பெருமாள், கேஎஸ் பாலு, சிவகாமி, சாகுல் ஹமீது உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோவை:** கோவை பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், ஏஐடியுசி சார்பில் எம்.ஆறுமுகம் எக்ஸ் எம்எல்ஏ, சி.தங்கவேல், எல்பிஎப். சிடிசி. பி.துரை, வி.ஆனந்த், எச்எம்எஸ் டி.எஸ்.ராஜாமணி, ஜி.மனோகரன், ஐஎன்டியுசி பாசமலர் பி.சண்முகம், துளசிதாஸ், சிஐடியு எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.வேலுச்சாமி, டிடிஎம் மூ.தியாகராசன், எஸ்.எஸ்.காளியப்பன், ஏஐசிசிடியு க.பாலசுப்பிரமணியன், வெங்கடாசலம், எம்எல்எப் ஷாஜகான், எல்டியுசி ஜெயபிரகாஷ், யூடியுசி பாஸ்டின்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூரில் தொமுச மாவட்டச் செயலாளர் கு.சேவியர், ஏஐடியுசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, சிஐடியு மாநிலச் செயலாளர் சி.ஜெயபால், ஐஎன்டியுசி மாவட்டச் செயலாளர் என்.மோகன்ராஜ், ஏஐசிசிடியு மாவட்ட தலைவர் கே.ராஜன் உள்ளிட்டோர் தலைமையில் நடைபெற்றது.

**நாமக்கல்:** திருச்செங்கோட்டில் ஏஐடியூசி மாவட்டத் தலைவர் எஸ்.ஜெயராமன், சிஐடியூ மாவட்ட துணைத் தலைவர் எம்.செங்கோடன், எச்எம்எஸ் மாவட்டக் குழு ஆர்.சோமசுந்தரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் க.அன்புமணி, ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், வி.தொ.ச மாவட்டப் பொறுப்பாளர் சி.ஜெயராமன், ஏஐடியூசி பொதுத்தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் ஆர்.கோபிராஜ், சைசிங் சங்கச் செயலாளர் கே.பி.ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தருமபுரி:** பென்னாகரத்தில் ஏஐடியுசி கட்டடச் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சி.மணி தலைமையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் துவக்கி வைத்துப் பேசினார். ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி, சிஐடியு சண்முகம், எச்எம்எஸ் அர்ச்சுனன், ஐஎன்டியூசி வெங்கடாசலம், எல்பிஎப் பரமசிவம் உள்ளிட்டோர் பேசினார்.

தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.ஜீவா தலைமை வகித்தார். எல்பிஎப் மாவட்ட தலைவர் மணி, மாவட்டச் செயலாளர் சண்முகராஜா, ஏஐடியூசி மாவட்ட துணைச் செயலாளர் என்.மனோகரன், ஏஐடியூசி போக்குவரத்து மண்டலச் செயலாளர் நாகராசன், ஏஐசிசிடியு மாவட்டச் செயலாளர் சி.முருகன், ஐஎன்டியுசி மாவட்ட தலைவர் சிவலிங்கம், சிஐடியு வெங்கட்ராமன், பெருமாள் உள்ளிட்டோர் பேசினர்.

பாலக்கோட்டில் சிஐடியு மாநிலச் செயலாளர் சி.நாகராசன் தலைமையில் நடைபெற்றது. மாநிலக் குழு உறுப்பினர் சி.கலாவதி, ஏஐடியூசி கட்டுமானச் சங்க மாவட்ட தலைவர் குழந்தைவேலு, ஏஐடியூசி மாதப்பன் ஆகியோர் பேசினர்.

அரூரில் எல்பிஎப் தலைவர் ஜே.பி.பழனி தலைமையில் சிஐடியு சி.ரகுபதி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் முருகன், மாவட்ட துணைச் செயலாளர் நடராஜன் உள்ளிட்டோர் பேசினார்கள்.

**அரியலூர்:** அரியலூரில் ஏஐடியுசி மாவட்டப் பொதுச்செயலாளர் டி.தண்டபாணி, தொமுச மாவட்டச் செயலாளர் ஆர்.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி, ஐஎன்டியுசி மாவட்ட தலைவர் டி.விஜயகுமார், எச்எம்எஸ் மாவட்டச் செயலாளர் எஸ்.ராமசுவாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் ஏஐடியுசி ஆர்.தனசிங், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் சொ.ராமநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

# 2025 ஜூலை 9 பொது வேலைநிறுத்தம்

## அனைத்துத் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

புதிய தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதற்கு எதிராகவும், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாகவும், ஜூலை 9 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தம் செய்வது என அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டம் முடிவெடுத்துள்ளது.

2025 மே 20 ஆம் தேதி நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்திற்கான தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டு வந்த நிலையில், பஹல்காமில் 26 அப்பாவி மக்களைக் கொன்ற கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில் நெருக்கடிகள் உருவாகின. நாடு முழுவதும் நிலவும் சூழ்நிலையைப் பரிசீலித்த பிறகு, புதிய தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதற்கு எதிராகவும், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுவாக மக்களின் பிற நியாயமான கோரிக்கைகளுக்கும் ஜூலை 9, 2025 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்த 2025 மே 15, அன்று டெல்லியில் கூடிய மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டம் முடிவு செய்து அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்துத் தொழிற்சங்கங்கள் பங்கேற்ற கூட்டம் 16.05.2025 சென்னையில் தொமுச தலைவர் கி.நடராசன் தலைமையில் கூடி முடிவெடுத்தது.

இக்கூட்டத்தில் தோழர்கள், கோ.சி.வள்ளுவன், ஜெ.விஜயகுமார், ஆ.சீ.அருணகிரி, பி.பன்னீர்செல்வம், என்.தனசேகரன், எம்.சண்முகம், எஸ்.சுந்தரமூர்த்தி (தொமுச) ம.இராதாகிருஷ்ணன், மு.சம்பத் (ஏஐடியுசி), வி.குமார், சி.திருவேட்டை (சிஐடியு) மு.சுப்ரமணியன் மா.சுப்ரமணியபிள்ளை ஏ.சிட்டிபாபு, வி.வாசுதேவன் (எச்எம்எஸ்) பா.சுகுமாரன் (ஐஎன்டியுசி) வி.சிவகுமார், ஈ.சடையாண்டி (ஏஐயூடியூசி) உ.அதியமான் (ஏஐசிசிடியு) அ.சேக்கிழார், என்.பழனி, கே.சம்பத் (யுடியுசி) எஸ்.மாயாண்டி, மு.சண்முகையா பாண்டியன் (டியுசிசி), இரா.அந்திரிதாஸ், கி.வெங்கடேசன் (எம்எல்எப்) இரா.சம்பத் (டபுள்யுபிடியுசி) க.பேரறிவாளன் (எல்எல்எஃப்) உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் பங்கேற்றனர்.

### விசிக எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு:

2025 மே 31 விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் திருச்சியில் மதசார்பின்மையைக் காக்கவும், வக்ஃபு திருத்த சட்டத்தைக் கண்டித்தும் நடைபெற உள்ள 'மதச்சார்பின்மை காப்போம்' பேரணிக்கு ஆதரவளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

### கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

மே 20 பொது வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைத்துத் தோழர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறோம். பொது வேலை நிறுத்தம் ஜூலை 9 ஆம் தேதிக்கு மாற்றியமைக்கப்பட்டதால் ஏற்கெனவே வழங்கப்பட்ட வேலை நிறுத்த அறிவிப்பு நோட்டீஸை மறு அட்டவணை (Reschedule) அறிவிப்பை உடனடியாக வழங்க வேண்டும்.

### 2025 மே 20 ஆம் தேதி ஆர்ப்பாட்டம்

மே 20 அன்று மாவட்ட தலைநகர்களிலும், தொழில் மையங்களிலும் சக்திமிக்க ஆர்ப்பாட்டங்களை நடத்தி, மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்க வேண்டும். கோரிக்கை மனு அனுப்பி வைக்கப்படும்.

### 2025 ஜூன் 2 ஆலைவாயில், தெருமுனை விளக்கக் கூட்டங்கள்

பொது வேலை நிறுத்த கோரிக்கைகளை மேலும் விரிவாக தொழிலாளர்களிடமும், பொது மக்களிடமும் கொண்டு செல்லும் வகையில் ஜூன் 2 ஆம் தேதியன்று ஆலை வாயில்களிலும், தெரு முனைகளிலும் விளக்கக் கூட்டங்கள் நடத்த வேண்டும்.

### துறை ரீதியான தயாரிப்புகள்

வங்கி, ரயில்வே, இன்ஸ்யூரன்ஸ், பாதுகாப்பு, பிஎச்இஎல், என்எல்சி, போக்குவரத்து, பொதுப் போக்குவரத்து, மின்சாரம், கூட்டுறவு, (டிஎன்சிஎஸ்சி, கூட்டுறவு வங்கி உட்பட டாஸ்மாக், சர்க்கரை, சிமெண்ட், பேப்பர், ஆவின், தனியார் தொழிற்சாலைகள் போன்ற நிறுவனங்களில் சங்கங்கள் துறைரீதியாகக் கூடிப் பொது வேலைநிறுத்தத் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும், தயாரிப்பு மாநாடுகளை நடத்த வேண்டும் என்று 25.03.2025 ஆம் தேதிய கூட்டம் முடிவு செய்ததின் அடிப்படையில் தயாரிப்பு மாநாடுகள் நடத்தாத அமைப்புகள் ஜூன் 10 ஆம் தேதிக்குள் கூடி திட்டமிட்டு அமலாக்க வேண்டும்.

# பாயும் புலியாக தோழர் கே.கோவிந்தம்மாள் சீறும் சிங்கமாக தோழர் திருமலய்யா



ப.பரமசிவம்



### தோழர் கே.கோவிந்தம்மாள்

சேலம் சதிவழக்கில் 1949–60 தர்மபுரி மாவட்டம் தொட்டம்பட்டி கல்லாவி இடையில் சரக்கு ரயில் கவிழ்க்கப்பட்ட வழக்கில் 33 கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது பொய் வழக்கு போட்டார்கள்.

அந்த வழக்கில் தனது அண்ணன் கே.செல்வராஜையையும் தமிழ்நாட்டின் முக்கியத் தலைவர்கள் பலர் மீது வழக்கு போட்டதால் கோபமடைந்த கே.செல்வராஜின் தங்கை கே.கோவிந்தம்மாள் ஆண்களைப் போல் பேண்ட் சர்ட் தொப்பி அணிந்துகொண்டு மோட்டார் சைக்களில் சென்று நாமக்கல் காவல்நிலையத்தின் மீது இங்குலாப் சிந்தாபாத் இந்தியக் கம்யூனிஸ்ட் வாழ்க என்று முழங்கியப்படி புலியாகப் பாய்ந்து வெடி குண்டை வீசி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது போட்ட சதி வழக்கைக் கண்டித்து இந்தத் தாக்குதலை நடத்தினார்.

சேலத்து கல்பனா கோவிந்தம்மாள் கைது செய்யப்பட்டு 2 ஆண்டுசிறைவாசம் அடைந்தார். சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட தலைவர்களில் ஒருவரான பரமத்திவேலூரைச் சேர்ந்த இளங்கோவை மணந்து கொண்டார். ஒரு பெண்குழந்தை பிறந்தது. இளங்கோ மறைவிற்குப் பிறகு பரமத்தி வேலூரில் 70 வயதுவரை மாணவர்களுக்கு இரவு பாடசாலை வைத்து நடத்தி அதன் மூலம் வரும் பணத்தை வைத்துத் தனது செலவுகளைச் செய்து கொண்டார். கொரோனாவிற்கு முதல் ஆண்டுதான் இறந்துள்ளார்.

### தோழர் திருமலைய்யா

விடுதலைக்குமுன்காங்கிரஸ்நிலப்பிரபுக்கள் பெரும் முதலாளிகளின் அடியாட்கள் ஆகியோர் போராட்டங்களை முறியடிக்கக் கருங்காலிகளாகச் செயல்பட்டார்கள். இவர்களுக்குப் பதிலடி கொடுக்க நமது இளைஞர்களுக்குத் தொண்டர்படை பயிற்சி அளிக்க முகாம்களைத் தொடங்கினர். அதில் தங்கப்பல் ரங்கசாமி அய்யாச்சாமி மைனர் திருமலைய்யா ஆகியோர்களை கே.செல்வராஜ் தயார் செய்தார். அதில் தோழர்கள் கே.எஸ். உத்தமலிங்கமும் கதிர் ராசுவும் அடங்குவர்.

கதிர்ராசு தலைகீழாக மணிக்கணக்கில் நிற்பார். உத்தமலிங்கம் 75 வயது வரை தலைகீழாக வெகு தூரம் நடப்பார். இதில் திருமலைய்யா சேலம் செவ்வாய்பேட்டை சிலேட்டர்ஹவுஸ் அருகில் வசித்து வந்தார். திருமலைய்யா மிஸ்டர் மெட்ராஸ் என்ற ஆண் அழகன் பட்டத்தைப் பெற்றவர். சேலம் நகரத்தில் காங்கிரஸ் ஆதிக்கம்தான் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்குத் தொல்லை கொடுப்பதுதான் அவர்கள் பணியாகும். கம்யூனிஸ்ட் கட்சியையும் மக்களையும் பாதுகாக்கவும் தேகப்பயிற்சி பெற்றவர்கள் 50க்கும் மேற்பட்டவர்கள் செயல்பட்டார்கள்.

இப்போது இருக்கிற சுபாஸ்சந்திரபோஸ் மைதானம்தான் சமூக விரோதிகள் கூடும் இடம். சீட்டாடுதல், வழிப்பறி செய்தல், பொதுமக்களிடம் பணம் பறிப்பது, சாராயம் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் விற்பது போன்ற சமூக விரோதப் போக்குகள் நடக்குமிடமாக இருந்தது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நமது கட்சியின் படை ஒன்று திரண்டு அவர்களை அடித்து விரட்டியது. இந்த நிகழ்வுகளெல்லாம் திருமலைய்யா தலைமையில்தான் நடக்கும். காங்கிரசும் அதன் கூலிப்படையான ரவுடிக் கூட்டமும் திருமலைய்யா மீது கண் வைத்தார்கள். இவனைத் தீர்த்துக்கட்டிவிட்டால் கம்யூனிஸ்ட்கள் கொட்டத்தை அடக்கிவிடலாம் என்று எண்ணினார்கள். சமயம் பார்த்துக் காத்திருந்தார்கள்.

ஒரு நாள் திருமலைய்யா தனியாகச் சென்றபோது, சமயத்தை எதிர்பார்த்து இருந்த சமூக விரோத ரவுடிக் கூட்டம் திருமலைய்யாவைக் கொல்ல குத்துக்கோல், கத்தி பயங்கர ஆயுதங்களுடன் துரத்தினார்கள். தனி ஆளாக மாட்டிக்கொண்டு அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள செவ்வாய்பேட்டை நோக்கி ஓடிவருகிறார். இடையில் முள்ளுவாடி கேட் அருகில் வரும் பொழுது விருத்தாச்சலம் போகும் ரயில் குறுக்கே வந்துவிடுகிறது. அந்தப் பக்கம் கொலைக் கருவிகளுடன் வரும் கூட்டம், இந்தப் பக்கம் ரயில் சென்றுகொண்டிருக்கிறது. நினைத்துப் பார்க்கிறார் எந்தப் பக்கம் போனாலும் சாவு நிச்சயம்.

அதனால் ரவுடிக் கூட்டத்திடம் சிக்கிச் சாவதை விட ரயிலிலேயே அடிபட்டு இறந்தாலும் பரவாயில்லை என்று எண்ணி மெதுவாக ஓடிய பெட்டிகளுக்கிடையில் சீறிப் பாய்ந்து விடுகிறார். துரத்தி வந்த கொலைகாரக் கூட்டம் நம்மகிட்ட சாகாமல் ரயிலில் அடிபட்டுச் செத்தான் என்று ஏமாந்த போதும் குதூகலமடைந்தார்கள். ரயில் பெட்டியின் இடையில் சீறிப் பாய்ந்தவர் செத்துவிடவில்லை. அந்தப் பக்கம் பல்டி அடித்து எழுந்து ஓடி போய் அவரின் படையான பயில்வான்கள் படையைத் திரட்டி வந்து நிற்கிறார்.

திருமாலைய்யா படையோடு நிற்பதைப் பார்த்து சமூக விரோதக் கூட்டம் அதிர்ச்சியடைகிறது. அதன் பிறகு சமூக விரோதக் கூட்டம் பின்வாங்கி ஓடியது. திருமலைய்யா கூட்டம் சமூக விரோதக் கூட்டத்தை ஓட ஓட துரத்தி அடித்துவிடுகிறார்கள். அன்றைக்கு இருந்த சாதாரண ரவுடிக் கூட்டத்திடமிருந்தும் காங்கிரஸ் இடம் இருந்து நமது கட்சியைக் காப்பாற்றவும் மக்களைச் சமூக விரோதிகளிடமிருந்து காப்பாற்றவும் தேகப்பயிற்சி படையை வைத்திருந்ததால் கட்சியையும் மக்களையும் பாதுகாக்க முடிந்தது.

சேலத்தில் தமிழ்நாடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு 2025 ஆக 15, 16, 17, 18 நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டைச் சிறப்பாக நடத்தி எதிர்காலத் திட்டத்தை நிறைவேற்றுவதோடு கே.கோவிந்தம்மாள் தியாகத்தையும் தோழர் திருமலைய்யா தியாகத்தையும் கவனத்தில் கொண்டு நாம் செயல்பட்டு மாநில மாநாட்டை வெற்றி பெறச் செய்வோம், மாநாட்டை நடத்துவோம், பெருந்திரளாகப் பேரணியை நடத்துவோம். செந்தொண்டர் படையை அமைத்து மாநாட்டையும் வழிநடத்தி வெற்றிக்கரமாக நடத்துவோம். வாருங்கள் தோழர்களே!!!

தொடர்புக்கு: 9442995040

## ஊருக்கு உழைத்தல் யோகம்!



உழைக்கும் மக்களின் உன்னத இயக்கமாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 26வது மாநாட்டை ஒட்டி பெருநிறுவனங்களிடம் நிதி வாங்குவதில்லை என்பதில் உறுதிகாட்டி உழைக்கும் மக்களிடம் உண்டியல் வசூல் நடத்தியிருக்கிறது. மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் உட்பட பலரும் பங்கேற்று வருகின்றனர்.

**48 கிளைகளில் நடைபெற்ற முதல்கட்ட வசூல்.**

| எண் | கிளையின் பெயர் | கிளைகள் | நிதி விபரம் |
|---|---|---|---|
| 1. | பனமரத்துபட்டி வீரபாண்டி ஒன்றியம் | 17 | 95,038 |
| 2. | நங்கவள்ளி ஒன்றியம் | 08 | 24,300 |
| 3. | கொண்டலாம்பட்டி மண்டலம் | 09 | 29,935 |
| 4. | சூரமங்கலம் மண்டலம் | 02 | 29,650 |
| 5. | சேலம் ஒன்றியம் | 03 | 14,600 |
| 6. | அயோத்தியாபட்டணம் வடக்கு | 01 | 3,046 |
| 7. | பெத்தநாயக்கன்பாளையம் நகரம் | 01 | 7,000 |
| 8. | தலைவாசல்கெங்கவல்லி | 01 | 4,400 |
| 9. | சங்ககிரி ஒன்றியம் | 01 | 4,036 |
| 10. | அம்மாபேட்டை மண்டலம் | 02 | 6,840 |
| 11. | அஸ்தம்பட்டி மண்டலம் | 03 | 7,337 |
| | மொத்தம் | 48 | 2,25,582 |

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சேலம் மாவட்ட நிர்வாக குழு மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள் கட்சி உறுப்பினர்கள் நிதி கொடுத்த விபரம்:

| | |
|---|---|
| கே.சுவாமிநாதன் | 25,000 |
| ஈ.ஆர்.கே. | 33,000 |
| ஜெ.மணிகண்டன் | 5,000 |
| கு.சிதம்பரம் | 2,000 |
| எம்.மாலதி | 2,000 |
| ஏ.நூர்தீன் | 1,000 |
| பி.என்.பெரியசாமி | 3,000 |
| என்.எம்.சடையன் பேரன் | 500 |
| சீனிவாசன் மகன் பரணிதரன் | 500 |
| பழ.ஜீவானந்தம் | 50,000 |
| டி.வி.கருணைதாஸ் | 3,000 |
| எம்.கணேசன் | 1,000 |
| எம்.லோகநாதன் | 1,000 |
| ஆர்.லோகேஸ்வரி | 1,830 |
| தனி – 2 கட்சி அரங்க கிளை | 5,000 |
| மேட்டூர் ஜெகநாதன் மகன் திருமணத்தில் | 5,000 |
| மேட்டூர் அஜய்கோஷ் | 1,000 |
| வி.ஜெயராமன் | 5,000 |
| எஸ்.பி.கே.ராமசந்திரன் | 5,000 |
| உ.கந்தசாமி | 5,000 |
| சிவக்குமார் மனைவி கலையரசி | 5,000 |
| வெங்கடேஷ் | 500 |
| எஸ்.பாலன் | 5,000 |
| ஆர்.ஸ்டாலின் | 10,000 |
| ஜலகண்டாபுரம் வெங்கடேஷ் | 500 |
| ஆறுமுகம் | 1,000 |
| ஏ.லோகநாதன் | 5,000 |
| அஸ்தம்பட்டி மண்டலம் | 10,000 |
| மொத்தம் | 1,91,830 |

## நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஆர்ப்பாட்டம்



நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஒன்றியம் மொளசியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில், அப்பகுதியில் பூர்வீகமாக வசித்து வந்த கண்ணம்மாள் என்பவரது வீட்டை இடித்தவர்களையும், அடியாட்களையும் கைது வேண்டும் என வலியுறுத்தி, திருச்செங்கோடு ஒன்றியச் செயலாளர் செல்வம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னுசாமி, விச மாவட்டச் செயலாளர் என்.செல்வராஜ், கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.அன்புமணி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன், எஸ்.ராமகிருஷ்ணன், வி.தொ.ச மாவட்டச் செயலாளர் சி.ஜெயராமன், மற்றும் காத்தவராயன், குணசேகரன், சரசு உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## அரியலூரில் மக்கள் சந்திப்பு



தொழிற்சங்கக் கூட்டமைப்பு சார்பாக, அரியலூரில் வேன் மூலம் மக்கள் சந்திப்பு பரப்புரை துவங்கப்பட்டது. ஏஐடியுசி மாவட்டப் பொதுச்செயலாளர் டி.தண்டபாணி, தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மாவட்டச் செயலாளர் ரெ.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி, எச்எம்எஸ் மாவட்ட துணைத் தலைவர் எஸ்.திருவள்ளுவர் தலைமையில், ஏஐடியுசி ஆர்.தனசிங், கட்சியின் அரியலூர் ஒன்றியச் செயலாளர் து.பாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

## வீராணகுன்னம் பழங்குடியினர் குடிமனைப்பட்டா கேட்டு ஆட்சியரிடம் மனு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் விளாகம் கிராமத்தில், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கும் ஐந்து இருளர் பழங்குடி குடும்பங்களுக்கு குடிமனைப்பட்டா கேட்டு, தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில், மாவட்ட ஆட்சியரிடம் காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் க.ஜெகதீசன் தலைமையில் மனு கொடுக்கப்பட்டது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் ச.சரஸ்வதி, மாவட்ட துணைத் தலைவர் எஸ்.சங்கர் மற்றும் சாந்தி, புஷ்பலதா, ராஜேஷ்வரி, பிரசாந்த், குணசேகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

## கோட்டையை நோக்கிப் பேரணி

**ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்க மாநிலப் பொதுக்குழு முடிவு**



தமிழ்நாடு ஏஐடியூசி ஆட்டோ மற்றும் போக்குவரத்து சம்மேளனத்தின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் ஒகேனக்கல்லில் தமிழ்நாடு ஏஐடியூசி மாநிலத் தலைவர் காசிவிஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் தருமபுரி மாவட்டச் செயலாளர் கந்தசாமி முன்னிலை வகித்தார். மாநிலப் பொதுச் செயலாளர் பி.மாரியப்பன், ஏஐடியூசி மாநில துணைத் தலைவர் கே.மணி ஆகியோர் கோரிக்கைகள் குறித்துப் பேசினார்கள்.

20 அன்று அனைத்து மத்தியத் தொழிற்சங்கங்கள் நடத்தும் மறியல் போராட்டத்தில் ஆட்டோக்களை ஓட்டாமல் அனைவரும் கலந்து கொள்வது. ஆட்டோ தொழிலாளர்களை அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்ய வேண்டும். சாலைப் போக்குவரத்து மசோதாவை ரத்து செய்ய வேண்டும். ஆட்டோ தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்திக் கையெழுத்து இயக்கம் நடத்துவது, குளிர்கால கூட்டத் தொடரின் போது கோட்டையை நோக்கிப் பேரணி நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## முதுநிலை மருத்துவர்களுக்கான கவுன்சிலிங் வெளிப்படையாக நடத்த வேண்டும்

முதுநிலை மருத்துவப் படிப்பை முடித்த அரசு மருத்துவர்கள் அல்லாத தனியார் மருத்துவர்களுக்கான bond posting கவுன்சிலிங் நேர்மையாக, வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படவில்லை. உயர் சிறப்பு மருத்துவப் படிப்பை முடித்தவர்களுக்கும், சீனியர்களுக்கும் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்களைக் காட்டி அதை எடுக்க வைத்துவிட்டு, ஜூனியர்களுக்கும், முதுநிலை மருத்துவம் படித்தவர்களுக்கும் ஸ்பெஷாலிட்டி இடங்களைத் தற்பொழுது காட்டுவது சரியல்ல, நியாயமல்ல. ஏற்கெனவே நடத்தப்பட்ட கவுன்சிலிங்கை ரத்து செய்துவிட்டு, மீண்டும் முறையாக, நேர்மையாக வெளிப்படைத்தன்மையுடன் கவுன்சிலிங் நடத்திட வேண்டும். தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று சமூகச் சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

## வக்ஃப் திருத்தச் சட்டம் 2025 புத்தகம் விற்பனை



அரசியல் அமைப்பின் மீதான நேரடித் தாக்குதலாக மத்திய அரசு கொண்டுவந்துள்ள வக்ஃப் திருத்தச் சட்டம் குறித்து, கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வஹிதா நிஜாம் எழுதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாநகர் மற்றும் புறநகர் மாவட்டக் குழுக்கள் மூலம் பிரசுரிக்கப்பட்ட, வக்ஃப் திருத்தச் சட்டம் 2025 நூல் அவிநாசி மசூதியில் விற்பனை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கட்சியின் ஒன்றியச் செயலாளர் இரா.முத்துச்சாமி, நாசர் அலி, ஏ.முகமது யாசின், குருசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

**புவிசார் குறியீடு பெற்றுள்ள**

## சம்பா மிளகாயை உலக அளவில் சந்தைப்படுத்துதல் கருத்தரங்கம்

விருதுநகர் மாவட்ட நிர்வாகம், புவிசார் குறியீடு பெற்றுள்ள சம்பா மிளகாயை உலக அளவில் சந்தைப்படுத்துதல் கருத்தரங்கம் விருதுநகரில் நடைபெற்றது. இதில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க விருதுநகர் மாவட்ட தலைவர் சங்கரபாண்டியன், விவசாயிகள் சங்க மாவட்டக் குழு உறுப்பினர் அருண்சிங், கட்சியின் திருச்சுழி நரிக்குடி ஒன்றியச் செயலாளர் செல்வம் ஆகியோர் பங்கேற்றனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடலூர் வட்ட மாநாடு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடலூர் வட்ட 15வது மாநாடு கடலூர் திருப்பாதிரிப்புலியூர் தண்டபாணி செட்டியார் திருமண மண்டபத்தில் 13.05.2025 அன்று நடைபெற்றது. மாநாட்டிற்கு கடலூர் மாநகரச் செயலாளர் டி.நாகராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். தோழர்கள் பாக்கியம், முருகன், பாலு, செல்வம், அரசன், தேவராஜ், பரிமளா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கட்சியின் மாநாட்டுக் கொடியினை முதுபெரும் தோழரும் முன்னாள் கடலூர் வட்டச் செயலாளருமான எஸ்.தமிழ்மணி அவர்கள் ஏற்றி வைத்தார். என்.சுந்தர ராஜா அவர்கள் மறைந்த தியாகிகளுக்கும் தோழர்களுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிய அனைத்துத் தோழர்களும் இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினார்கள். மாநகரக் குழு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டைத் துவக்கி வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி உரை நிகழ்த்தினார். மாநாட்டில் கடலூர் மாவட்டச் செயலாளர் பி.துரை, மாவட்டத் துணைச் செயலாளர் வி.குளோப், பி.ஜெயராஜ், உள்ளிட்டோர் பங்கேற்றனர். செயலாளராக ஆர்.கிருஷ்ணமூர்த்தி, துணைச் செயலாளர்களாக ஜெ.பன்னீர்செலவம், வி.ஆர்.முருகன், பொருளாளராக ஆர்.வளர்மதி வாசுகி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## புற்றுநோய் கண்டறிதல் சிறப்பு முகாம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 23வது வார்டு நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் புற்றுநோய் கண்டறிதல்(ம) சிகிச்சை விரிவாக்கத் திட்டம் திட்டத் தொடக்க விழா திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார். 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பங்கேற்றார்.

**கட்சிக் கொடிக் கம்பங்களை அகற்றும்**

## தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்



அரசியல் கட்சிக் கொடிக்கம்பங்களை அகற்றுவது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையின் தீர்ப்பை, மறு பரிசீலனை செய்ய தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றும் இம்மனுவை முதல்வருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் வழியாக மனு அளித்துள்ளது. அதன் பகுதியாக, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் அவர்களிடம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில்குமார், மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் மனு அளித்தனர்.

## கட்டடத் தொழிலாளர் சங்கக் கிளை நிர்வாகிகள் தேர்வு

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க மணிகண்டம் ஒன்றியம் சோமரசம்பேட்டை மற்றும் புதுத்தெரு கிளைக் கூட்டம் எம்.மருதாம்பாள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் எம்.ஆர்.முருகன் சிறப்புரையாற்றினார்.

**புதுத்தெரு:** புதுத்தெரு கிளைத் தலைவராக பத்மாவதி, செயலாளராக ராதா, பொருளாளராக மருதாம்பாள், துணைத் தலைவராக பாலாமணி, துணைச் செயலாளராக நதியா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சோமரசம்பேட்டை:** சோமரசம்பேட்டை கிளைத் தலைவராக கவிதா, செயலாளராக தனலெட்சுமி, பொருளாளராக சாந்தலெட்சுமி, துணைத் தலைவராக அழகுநிலா, துணைச் செயலாளராக சங்கீதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் மாதர் சங்க ஒன்றியப் பொருளாளர் எம்.ரஜியாபேகம், இளைஞர் மன்ற ஒன்றியச் செயலாளர் ஏ.இன்னசென்ட் விமலா மேரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**அதவத்தூர் கிளை:** மணிகண்டம் ஒன்றியம் அதவத்தூர் கிளை மற்றும் தெற்குத் தெரு புதிய கிளை அமைப்புக் கூட்டம் டி.சந்திரா தலைமையில் நடைபெற்றது. இதில் சங்க மாவட்டக் குழு உறுப்பினர் எம்.ரஜியாபேகம் கலந்துகொண்டு வழி நடத்தினார். அதுவத்தூர் கிளைத் தலைவராக ஆர்.சரஸ்வதி, செயலாளராக எம்.மருதாம்பாள், பொருளாளராக டி.சந்திரா, துணைத் தலைவராக எம்.தவமணி, துணைச் செயலாளராக எல்.மணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தெற்குத் தெரு கிளைத் தலைவராக எஸ்.நிர்மலா, செயலாளராக பி.ஐஸ்வர்யா, பொருளாளராக வி.சந்திரா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**எம்.ஜி.ஆர் நகர் கிளை:** மணிகண்டம் ஒன்றியத்தில் எம்.ஜி.ஆர்.நகர் கிளைக் கூட்டம் எஸ்.தேவி தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் குழு உறுப்பினர் எம்.ரஜியாபேகம் கலந்துகொண்டார். இதில் கிளைத் தலைவராக மணிமேகலை, செயலாளராக ராசாத்தி, பொருளாளராக விஜயகுமாரி, துணைத் தலைவராக தேவி, துணைச் செயலாளராக ரேவதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

இதற்கெல்லாம் அடுத்து எஸ்.வி.இராஜதுரை கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு மிக நீண்ட விளக்கம் சிறப்புக்குரிய வகையில் எழுதியிருந்தார். சுமார் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அதை மிக அமைதியாக ஆழமாகப் படித்துப் பார்த்து 'காக்கை சிறகினிலே' இலக்கிய இதழில் எழுதினோம்.

கம்யூனிஸ்ட் அறிக்கையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக எஸ்.வி.இராஜதுரை எழுதிய நூலை கைவிளக்காகக் கொள்ளுங்கள். கம்யூனிஸ்ட் அறிக்கை என்பது தலைப்பைப் பார்த்தவுடன் கட்சி அறிக்கைகள் போல என நினைத்து விடக் கூடாது. இவை மாமேதைகளான கார்ல் மார்க்சு, ஏங்கெல்சு எழுதியவை.

(2) 'கேப்பிட்டல்' என்ற சொல்லைத் தமிழில் 'மூலதனம்' என்றே ம.சிங்காரவேலரும், ப.ஜீவானந்தமும் அறிமுகப்படுத்தினர். இதைக்கொண்டு பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார் 'முதலீடு' என மூலதனத்தைப் பற்றி 48 பக்கங்களில் ஒரு சிறு நூலில் அதன் அறிமுகத்தை அளித்தார். இது கண்டிப்பாக போதுமானதாக இருக்க முடியாது.

(1) எத்தனையோ பெருமக்கள் மூலதனத்தைத் தமிழில் தர முயன்றனர். முடியவில்லை. 1980 களில் க.ரா.ஜமதக்னி மூலதனத்தைத் தமிழில் தந்தார். மிகை மதிப்பையும் உடன் வழங்கினார். ஆக கேப்பிட்டல் மூலதனம், மிகை மதிப்பு தொகுப்போடு 6 தொகுதிகள் (பக்கங்கள் 5272)

(2) தியாகு மூலதனத்தை 5 தொகுதிகள் தந்தார். மிகை மதிப்பை அவர் மொழிபெயர்க்க வில்லை. (பக்கங்கள் 3225)

(3) சோதிப்பிரகாசம் 'முதல்' என்ற பெயரில் மூலதனத்தின் முதல் தொகுதியின் சிறிய பகுதியான முதல் அதிகாரத்தை மட்டும் தமிழாக்கி இருக்கிறார்.

இந்த மூன்றில் எதை வேண்டுமானாலும் நீங்கள் படிக்கத் தொடங்கலாம்.

அதன் முழுமையை நோக்கிப் பயணிக்கலாம். மூலதனத்தில் முதல் அதிகாரம் முக்கியமானது. படிக்கத் தொடங்குங்கள். மார்க்சியத்தைப் பயிலத் தொடங்குங்கள். அது ஒரு பொருளாதார அரசியல் கல்வி, ஆனால் செயலூக்கம் உள்ளது. விஞ்ஞான பூர்வமானது.

முதல்வர்கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இந்த பேரறிவிப்பால் கார்ல் மார்க்சின் சிலையை நிறுவ இருக்கிற இந்த நேரத்தில் அவரின் மூளை உழைப்பின் கனத்தை நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டும் என்பதால் நாம் இதனைச் சொல்ல வருகின்றோம்.

நம் தலைவர்களைக் கவர்ந்த மார்க்ஸின் பேரறிவு உலக மக்களுக்கு வழங்கிய செய்தி என்ன? என்பதைத் தி.மு.க. இளைஞர்கள் அறிந்து கொள்ள (1) கம்யூனிஸ்ட் அறிக்கை (2) மூலதனம் ஆகிய இரண்டு ஆவணங்களை ஆங்கில மூலத்தோடு தமிழில் படித்துப் பாருங்கள். அதன் உள்ளடக்கத்தைப் பரக்கக் காணலாம். ஒரு புதிய 'பொன்னுலகத்தைக்' காண்பீர்கள்.

இது எளிதானல்ல. கடினமானதுதான். நமது தலைவர் ஸ்டாலின் நமது சிந்தனையைக் கிளர்ச்சித் துடிப்புக்கு உரிய தாக்கி இருக்கிறார். மேலே நாம் சொன்ன இரு ஆவணங்களைப் படிப்பதன் மூலம் மார்க்சின் மேதைமைத் தெரிய வரும். மார்க்சிய ஒளி எழும். இரண்டு மேதைகளின் அறிவின் மாட்சித் துலங்கக் காணலாம்.

வலதுசாரி சிந்தனைகளும் முதலாளித்துவ மும் முற்றிப் பருத்துபெருத்துவரும் வேளையில் மார்க்சியம் தன்னெழுச்சிப் பெறும். இதனை அறிய மார்க்சியத்தைப் பயில வேண்டும்; ஏனெனில் இது மக்களுக்கானது.


தலைவர் ஸ்டாலின் கார்ல் மார்க்சின் சிலைத் திறப்பு பேரறிவிப்பும் சிலைத்திறக்க இருக்கிற தருணமும் தி.மு.க. இளைஞர்களின் இடையே அறிவலையைத் திராவிட இயக்க மரபுப்படி எழுப்பி இருக்கிறது. உலக மாந்தரைத் தமிழகத்தின் திசையைப் பார்க்கச் செய்து இருக்கிறது.

**நன்றி: முரசொலி**

# அவதூறு பேசிவிட்டு மன்னிப்புக் கேட்பதை ஏற்க முடியாது!

## பாஜக அமைச்சருக்கு உச்சநீதிமன்றம் சாட்டையடி

மத்தியப்பிரதேச பாஜக அமைச்சர் தெரிந்தே பேசிவிட்டு மன்னிப்புக் கேட்பதை ஏற்க முடியாது என்று கடுமையாகச் சாடியுள்ள உச்சநீதிமன்றம், கர்னல் சோபியா குரேஷி மீதான அவதூறைக் கண்டு நாடே வெட்கப்படுகிறது என்றும் கண்டித்துள்ளது.



மத்தியப்பிரதேசத்தில் மே 12 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பாஜக அமைச்சர் விஜய் ஷா, "அவர்கள் (பயங்கரவாதிகள்) நமது (இந்து) சகோதரி களின் சிந்தூரை அழித்தனர். அவர்களை அழிக்க நாம் அவர்களின் சகோதரியை (ராணுவ கர்னல் சோபியா குரேஷி) அனுப்பி பழிவாங்கினோம். அவர்கள் (பயங்கரவாதிகள்) நமது இந்து சகோதரர்களைக் கொன்றனர். பிரதமர் மோடி, அவர்களின் (பயங்கரவாதிகளின்) சகோதரியையே ராணுவ விமானத்தில் அனுப்பி அவர்களின் வீடுகளைத் தாக்கி பதிலடி கொடுத்தார். அவர்கள் (பயங்கரவாதிகள்) நமது சகோதரிகளை விதவைகளாக்கினர். பிரதமர் மோடி, அவர்கள் சமூகத்தைச் சேர்ந்த சகோதரியையே அவர்களுக்குப் பாடம் கற்பிக்க அனுப்பினார்" என்று பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

தமது பேச்சில் கர்னல் குரேஷியின் பெயரை அமைச்சர் குறிப்பிடவில்லை என்றாலும், அவர் சோபியா குரேஷி பற்றியே இவ்வாறு கூறினார். கர்னல் சோபியா குரேஷி இஸ்லாமியர் என்பதால், அவரைப் பயங்கரவாதிகளோடு (அவர்களும் முஸ்லிம்கள் என்பதால்) இணைத்து, பயங்கரவாதிகளின் சகோதரி என்றார். மதம் கடந்து, அனைவரும் இந்தியர் என்ற உணர்வோடு ராணுவ வீரர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆனால், அந்த ராணுவத்திற்குள்ளும் அதிலும் கர்னல் போன்ற மிக முக்கியமான பதவியில் இருக்கும் சோபியா குரேஷியை, இந்தியர் என பார்க்காமல், முஸ்லிம் என அடையாளப்படுத்தியதுடன், பயங்கரவாதிகளின் சகோதரி என்று கொச்சைப்படுத்தியது கடும் எதிர்ப்புக்கு உள்ளானது. எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. அமைச்சர் விஜய் ஷா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தின. ஆனால், அவர் மீது பாஜக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து, அமைச்சர் விஜய் ஷா மீது வழக்குப்பதிவு செய்தது. தங்களின் உத்தரவு கிடைக்கப்பெற்ற 4 மணி நேரத்திற்குள் விஜய் ஷா மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என காவல்துறைக்கு ஆணையிட்டது. ஆனால், "சோபியா உடன்பிறந்த சகோதரி போன்றவர். அவரிடம் நூறு முறை மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று காணொளி ஒன்றை வெளியிட்ட அமைச்சர் விஜய் ஷா, தன் மீதான வழக்கை ரத்து செய்யுமாறு உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

உச்சநீதிமன்றத்தில் நீதிபதி சூர்யகாந்த் அமர்வு முன்பு அந்த மனு விசாரணைக்கு வந்தது. அப்போது, "மன்னிப்பு கேட்டதை கருத்தில் கொண்டு வழக்கை ரத்து செய்ய வேண்டும்" என அமைச்சர் விஜய் ஷா தரப்பு கோரிக்கை விடுத்தது.

அதற்கு "நீங்கள் எங்கே மன்னிப்பு கேட்டீர்கள்? அது எந்த மாதிரியான மன்னிப்பு? மன்னிப்பு எனில் அதற்கு அர்த்தம் இருக்கிறது. வழக்கிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகத்தான் சிலர் மன்னிப்புக் கேட்கிறார்கள். அந்த மாதிரியான நேரங்களில் அவர்கள் முதலை கண்ணீர் வடிக்கிறார்கள். உங்களுடையது எந்த மாதிரியான மன்னிப்பு?" என்று பாஜக அமைச்சர் விஜய் ஷா தரப்பிடம் நீதிபதிகள் காட்டமாக கேள்வி எழுப்பினர்.

"நீங்கள் வெளிப்படுத்தியிருப்பது மிக மோசமான கருத்துகள். முற்றிலும் சிந்தனையின்றி பேசியிருக்கிறீர்கள். அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி, பொதுநபராக இருக்கும் நீங்கள், வார்த்தைகளின் விளைவுகளைத் தெரிந்து பேச வேண்டும். மக்களின் உணர்வுகள் எவ்வளவு இரக்கமின்றி புண்படுத்தப்பட்டுள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, உங்களின் மன்னிப்பு காணொளியை நாங்கள் ஏற்க முடியாது" என்று நீதிபதிகள் காட்டமுடன் கூறினர்.

மேலும், "நீங்கள் பேசிய கருத்துக்களை ஆய்வு செய்ய சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்றை அமைக்கிறோம். அந்தக் குழுவில் ஒரு பெண் அதிகாரி உட்பட மூன்று மூத்த ஐபிஎஸ் அதிகாரிகள் இருப்பார்கள். இப்போதைக்கு கைது நடவடிக்கை தேவையில்லை. விசாரணை முடியட்டும். விசாரணைக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். அடுத்த மாதம் முதல் வாரத்தில் சிறப்பு புலனாய்வுக் குழுவின் அறிக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்" என்று நீதிபதிகள் அறிவித்தனர்.

"உங்களை நினைத்து ஒட்டுமொத்த தேசமும் வெட்கப்படுகிறது. இதிலிருந்து எப்படி வெளியே வர முடியும் என்பது உங்கள் கைகளில்தான் இருக்கிறது. எங்கள் கைகளில் எதுவும் இல்லை" என்று நீதிபதி சூர்யகாந்த் கூறினார். சிறப்பு புலனாய்வுக் குழு அமைப்பது தொடர்பாக மத்தியப்பிரதேச காவல்துறைக்கு உத்தரவுகளையும் பிறப்பித்தனர். இதனையடுத்து விசாரணை மே 28ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# சசி தரூர் ஒரு ஸ்லீப்பர் செல்: பினாய் விஸ்வம் சாடல்!

"காங்கிரஸுக்குள் இருக்கும் பாஜகவின் ஸ்லீப்பர் செல்லில் இடம்பிடிக்க சசி தரூர் முயற்சி செய்கிறார்" என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம் குற்றஞ்சாட்டியுள்ளார்.



அவரது எக்ஸ் பக்கப் பதிவில், "பயங்கரவாதத்துக்கு எதிராக நடத்தப்பட்ட யுத்தத்தை, பாஜக தனது தேர்தல் அரசியல் வேட்டைக்காகப் பயன்படுத்துகிறது.

காங்கிரஸ் கட்சிக்குள் பாஜக ஸ்லீப்பர் செல் இருப்பதாக ராகுல் காந்தியே சொல்லி இருப்பது முக்கியமான விஷயம்.

காங்கிரஸுக்குள் இருக்கும் பாஜகவின் ஸ்லீப்பர் செல்லில் இடம்பிடிக்க சசி தரூர் முயற்சி செய்கிறார். பாஜகவுக்கு ஒவ்வொரு நகர்வையும் அரசியல் ஆதாயத்துக்காக எப்படிப் பயன்படுத்துவது என்று தெரிந்துள்ளது." எனக் கூறியுள்ளார்.

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

சீர்கேடுகளுக்கும், உச்ச நீதிமன்றம் ஏதோவொரு வகையில் ஒப்புதல் தந்துகொண்டே வந்திருக்கிறது.

அத்துடன், தன்னுடைய பங்காக உச்ச நீதிமன்றம் ஒன்றிய அரசுக்கும் மாநில ஆளுநருக்கும் வெவ்வேறான வகையில் உரிமைகளை வாரி வழங்கியுள்ளது. மேலும், தானாகத் தனது ஆணைகள், தீர்ப்புகள், தீர்வுகள் எனப் பல முறைகளில், மாநிலச் சட்டப்பேரவைகளையும் அமைச்சரவைகளையும் கீழ்மைப்படுத்தி வந்திருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக, நாடாளுமன்றமும் ஒன்றிய அரசும் தம்விருப்பாகச் செயல்பட்டபோதெல்லாம், உச்ச நீதிமன்றம் அவற்றைத் தடுத்து நிறுத்த முயலவில்லை.

அரசமைப்புச் சட்டத்தில் இல்லாத உரிமைகளை ஆளுநர்கள் எடுத்துக்கொண்டபோதும், மாநில அமைச்சரவைக்கு இருக்கின்ற உரிமைகளை ஆளுநர்கள் பறித்தபோதும் உச்ச நீதிமன்றம் ஆளுநர் பக்கமே பெரிதும் இருந்துவந்திருக்கிறது.

இவற்றையெல்லாம் பட்டியலாகத் தொகுத்தால் பக்கங்கள்தான் பெருகும்.

எடுத்துக்காட்டாக அண்மைக் காலத்தில் எழுந்துள்ள சில சிக்கல்களை மட்டும் காணலாம்:

1. நிதி ஒதுக்கீட்டு நெருக்கடிகள்
2. எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான ஒன்றிய அரசின் புலனாய்வுகள்
3. பல்கலைக்கழக நிதி நல்கை ஆணையத்தின் செயல்பாடுகள்
4. மருத்துவ நுழைவுத் தேர்வு
5. பல்கலைக்கழகங்களில் ஆளுநருக்கு இல்லாத உரிமைகள்
6. தலைமைச் செயலர், காவல் துறைத் தலைவர் போன்ற பொறுப்புகளின் பணியமர்த்தல்.

ஆகியவை மாநில அரசினர், அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் வேண்டல்களை நிறைவேற்றுகின்ற வாய்ப்புகளைத் தடுப்பனவாகவே அமைந்துள்ளன.

### சட்டப்பேரவைகளின் உரிமைகளைக் காக்கவேண்டும்

நாடாளுமன்றத்தின் உரிமைகள், உச்ச நீதிமன்றத்தின் கடமைகள் ஆகியன தனித்த ஆய்வுக்குரியனவாகும்.

ஆனால், நாடாளுமன்றத்துக்கு இணையாக விளங்கும் மாநிலச் சட்டப்பேரவைகளுக்கான உரிமைகளைக் குலைக்கும் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

இப்போதிருக்கும் இந்திய அரசமைப்புச் சட்டம், மாநில இன மொழி மக்களை மேம்படுத்தும் வகையிலான முழு உரிமைகளைத் தந்துவிடவில்லை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. மாநிலங்களின் தன்னாட்சிக்கான மாறுதல்களை உருவாக்கவேண்டும் என்னும் போராட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

ஆயினும், இன்றைய வடிவிலான அரசமைப்புச் சட்டம் தந்திருக்கின்ற சில இணையான உரிமைகளைகூடப் பறிக்க முனைவதை ஏற்க இயலாது. நாடாளுமன்றத்துக்கு இணையாக உள்ள மாநில சட்டப்பேரவைகளைத் தகுதி தாழ்த்தும் நடவடிக்கைகளை முறியடித்தாக வேண்டும்.

தொடர்புக்கு : 9444075561

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

தினேஷ் சீரங்கராஜ் ஆகியோர் உரையாற்றினர். இளைஞர் பெருமன்ற தேசியச் செயலாளர் லெனின் பாபு நன்றி கூறினார்.

### பிரதிநிதிகள் மாநாடு

16.05.2025 அன்று பிரதிநிதிகள் மாநாடு கச்சாபி அரங்கில் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற தேசியத் தலைவர் சுக்ஜிந்தர் மகேஷரி கொடியேற்றி வைத்தார். தியாகிகள் நினைவு ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில், தமிழ்நாட்டிலிருந்து 85 பிரதிநிதிகள் உள்ளிட்டு, 23 மாநிலங்களிலிருந்து 570 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பிரதி நிதிகள் மாநாட்டிற்கு சுக்ஜிந்தர் மகேஷரி (பஞ்சாப்), அருண் (கேரளா), ரோஷன் குமார் சின்ஹா (பிகார்), சையது வலி உல்லா காதரி (தெலங்கானா), ஆர்த்தி (மகாராஷ்டிரா) ஆகியோர் தலைமை தாங்கினர்.

### வாழ்த்தரங்கம்

மாநாட்டில், கட்சியின் தேசியச் செயலாளர் கே.நாராயணா, இளைஞர் பெருமன்ற முன்னாள் பொதுச் செயலாளர் கே.சந்தோஷ்குமார், விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் ரெளலா வெங்கய்யா, இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய தலைவர் என்.பெரியசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாதர் சம்மேளனப் பொதுச் செயலாளர் நிஷா சித்து, மாணவர் பெருமன்றப் பொதுச்செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், தலைவர் விராஜ் திவாங், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் தலைவர் ஏ.ஏ.ரஹீம் எம்.பி., ஏஐடியுசி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் கொண்டல் ராவ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கட்சியின் தேசியச் செயலாளர் பினாய் விஷ்வம் அவர்களின் வாழ்த்துச் செய்தி மாநாட்டில் வாசிக்கப்பட்டது. மேலும், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஜாஷ்டி சலேமேஸ்வரர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

### கருத்தரங்கம்

16.05.2025 அன்று மாலை இரா.திருமலை தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், “வேலைவாய்ப்பற்ற வளர்ச்சியும், வேலையின்மைப் பிரச்சினையும்” என்கிற தலைப்பில் வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளர் சி.எச்.வெங்கடாசலம், “தேர்தல் சீர்திருத்தம் காலத்தின் தேவை” என்கிற தலைப்பில் இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் செயலாளர் அஸ்வினி பக்ஷி அவர்களும் உரையாற்றினர்.

**தேர்தல் சீர்திருத்தை வலியுறுத்தி ஜூலை மாதத்தில் 5 கோடி கையெழுத்து இயக்கத்தையும், பகத்சிங் தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை நிறைவேற்றக்கோரி அக்டோபரில் தேசிய நெடும்பயணத்தையும் நடத்துவது என மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.**














### தீர்மானங்கள்

- அனைத்து இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும்.
- கல்வி, வேலை, அதிகாரத்தில் சமூக நீதியை நிலைநாட்ட உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தேர்தலில் வெளிப்படைத்தன்மையும் உறுதிபடுத்த வேண்டும். மற்றும் சீர்திருத்தங்களை உறுதி செய்ய வேண்டும்.
- கல்வியை அனைவருக்கும் கட்டணமில்லாமலும், சமமாகவும் வழங்க வேண்டும்.
- ஒப்பந்த, அவுட்சோர்சிங் முறையை ரத்து செய்து அனைவரையும் நிரந்தரப்படுத்த வேண்டும்.
- சம வேலைக்கு சம ஊதியம் பெறும் உரிமையும் மற்றும் தொழிற்சங்க அமைக்கும் உரிமையும் உறுதிப்படுத்த வேண்டும்.
- சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுத்திட தனிச்சட்டம் இயற்றிட வேண்டும்.
- ஜிக் தொழிலாளர்களுக்கு அரசே தனிச் செயலியைத் துவங்கி நடத்த வேண்டும்.
- கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்.
- போராடும் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். போராடுபவர்கள் மீதான அரசு பயங்கரவாதத்தை நிறுத்த வேண்டும்.
- பாலினச் சமத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்.
- பொதுத்துறை நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டும்.
- இயற்கை வளங்களைக் கொள்ளைபோவதைத் தடுக்க வேண்டும்.
- சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத வகையில் இளைஞர்களுக்குப் பசுமை வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- தேசிய கல்விக் கொள்கையைத் திரும்பப் பெற வேண்டும்

உள்ளிட்டுப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பெரியார் படத்தை அகற்ற விடமாட்டோம் இளைஞர்கள் உறுதி

இளைஞர் பெருமன்ற மாநாட்டையொட்டி திருப்பதியில் பல்வேறு பகுதிகளில் பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன. அதில் பெரியார் படமும், அவரின் கீழ்க்கண்ட வாசகமும் கொண்ட பேனர் வைக்கப்பட்டிருந்தது.

“நமது சீரழிவுக்கு மூலக்காரணம் கடவுள்தான் என்றால், அந்தக் கடவுளை அழித்துவிடுங்கள். அதற்குக் காரணம், மதமாக இருந்தால், மதத்தை அழித்துவிடுங்கள். மனுதர்மம், கீதை அல்லது வேறு எந்தப் புராணமாக இருந்தால், அவற்றை எரித்துச் சாம்பலாக்குங்கள். அது கோயிலாகவோ அல்லது பண்டிகையாகவோ இருந்தால், அவற்றைப் புறக்கணிக்கவும். இறுதியாக, அது நமது அரசியலாக இருந்தால், வெளிப்படையாக அறிவிக்க முன்வாருங்கள்”.

இதைக் காவல்துறை அகற்ற வேண்டும் என்று இளைஞர் பெருமன்ற நிர்வாகிகளை மிரட்டினர். பேனரை அகற்ற மறுத்து நிர்வாகிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. நீண்ட நேரம் பேனரை அகற்ற காவல்துறை முயற்சி செய்தனர்; இதை இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் முறியடித்தனர்.

## தேசியக்குழு நிர்வாகிகள் தேர்வு





- தலைவர் ரோசன் குமார் சின்ஹா (பிகார்), செயலாளர் சுக்ஜிந்தர் மகேஷரி (பஞ்சாப்).

மாநாட்டில் 105 பேர் கொண்ட புதிய தேசியக்குழுவும், 2 அழைப்பாளர்களும், 40 பேர் கொண்ட தேசிய நிர்வாகக்குழுவும் தேர்வு செய்யப்பட்டனர்.

**தலைவர்**

ரோசன் குமார் சின்ஹா (பிகார்),

**பொதுச் செயலாளர்**

சுக்ஜிந்தர் மகேஷரி (பஞ்சாப்),

**துணைத் தலைவர்கள்**

க.பாரதி (தமிழ்நாடு),
பிரதீப் சேத்தி (ஒடிசா),
ஹிமான்சு (குஜராத்),
ஆர்த்தி (மகாராஷ்டிரா),

**செயலாளர்கள்**

டி.டி.ஜிஸ்மன் (கேரளா),
ஹரீஷ் பாலா (கர்நாடகா),
சையது வலி உல்லா காதரி (தெலங்கானா),
ராஜேந்திர பாபு (ஆந்திரா)
ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**தமிழ்நாட்டிலிருந்து தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள்**

க.பாரதி,
இரா.தமிழ்பெருமாள்,
ஜி.சரவணன்,

**தேசியக்குழு உறுப்பினர்கள்**

எம்.செல்வகுமார்,
கலை.அஸ்வினி,
எஸ்.தெய்வசிகாமணி,
மௌ.குணசேகர்,
எஸ்.ஆதில்

## இளைஞர்கள் ஒன்றிணைந்தால்தான் மாற்றத்தை உருவாக்க முடியும்

மாநாட்டில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி செல்லமேஸ்வரர் ஆற்றிய உரை:



இந்தியா முழுவதும் மக்களைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய இளைஞர்கள் ஒன்று கூடும் கூட்டம் என்பதால் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வந்திருக்கிறேன். இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களுக்குச் சொல்ல இருப்பது ஒன்றுதான். நாட்டின் தேர்தல் முறை பெருமளவில் மாற்றத்தைக் கண்டிருக்கிறது. அந்த மாற்றங்கள் முன்னேற்றத்திற்கானதாக இல்லாமல், மக்களுக்கு எதிரானதாக மாறி இருக்கிறது என்பதுதான் வருத்தம். இந்தத் தேர்தல் முறை மக்களைப் பற்றியோ, நாட்டைப் பற்றியோ எண்ணாமல் பணத்தை முன்னிலைப்படுத்தி நடத்தப்படுகிறது. இன்று தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பது பணம்தான் என்று ஆகிவிட்டது.

ஒரு சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்வதற்கே பல கோடிகளைச் செலவு செய்பவர்கள் தான் வெல்ல முடியும் என்ற நிலை உருவாகி இருக்கிறது. பல கோடிகளைச் செலவு செய்து எம்.எல்.ஏ, எம்.பி என்று மக்கள் பிரதிநிதியாக ஆகும் அவர்கள் எப்படி மக்களுக்கு நல்லது செய்வார்கள். இவற்றை மாற்ற வேண்டும் என்று சொன்னால் தேர்தல் முறையை மாற்ற வேண்டும். அதை மாற்றுவதற்கான நபர்கள் இளைஞர்கள் தான். இளைஞர்கள் ஒன்று இணைந்தால்தான் மாற்றத்தை உருவாக்க முடியும். இந்த மாநாடு இதைப் பற்றி விவாதிக்க இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

## 17வது அகில இந்திய மாநாட்டு படங்கள்
















கோவை மாவட்டம் – சூலூர் கண்ணம்பாளையத்தில்

**பாலதண்டாயுதம் நற்பணி மன்றம்**
**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம்**
**இந்திய மாதர் தேசிய சம்மேளனம்**

இணைந்து நடத்தும்...



AIYF NFIW

**தியாகச் செம்மல் கே. பாலதண்டாயுதம்**
**52-ஆம் ஆண்டு நினைவு விழா**

**2025 மே 31 - ஜூன் 1**
சனி, ஞாயிறு
தியாகிகள் கலையரங்கம்
கண்ணம்பாளையம்

- ★ கைப்பந்து, கிரிக்கெட், சிறுவர் கபாடி, வழுக்குமரம் உட்பட 65 க்கும் மேற்பட்ட விளையாட்டுகள்
- ★ இரத்ததானக் கொடையாளர்களுக்குப் பாராட்டு !
- ★ கண் தானம் செய்த குடும்பத்தாருக்குப் பாராட்டு !
- ★ கண்ணம்பாளையம் பள்ளிகளில் கல்வியில் முன்னிலை பெற்றவர்களுக்குப் பரிசுகள்
- ★ 10,12 வகுப்புகளில் எண்பது சத மதிப்பெண் பெற்ற மாணவர்கள், அவர்தம் பெற்றோர்க்குப் பாராட்டு
- ★ வாரிசுகளில்லாத வயது முதிர்ந்தோர்க்கு உடைகள்
- ★ மது, போதைப் பழக்கத்திற்கு எதிராக உறுதிமொழி ஏற்பு
- ★ கலைநிகழ்ச்சிகள், இன்னும் பல...

**பரிசளிப்புக் கூட்டம்**
01.06.2025
ஞாயிறு மாலை 7.00 மணி

தோழர்கள்
**சு. மோகன்குமார்**
மாநில நிர்வாகக்குழு உறுப்பினர், CPI

**ஜே. ஜேம்ஸ்**
மாவட்ட துணைச் செயலாளர், CPI

**மௌ. குணசேகர்**
மாவட்டச் செயலாளர், AIYF

**மு.வ.கல்யாணசுந்தரம்**
முன்னாள் மாவட்டத் தலைவர், AIYF

**பி. சுப்பிரமணியம்**
மாவட்டப் பொருளாளர், AITUC

**கே. கண்ணன், எஸ். கோட்டியப்பன், வீ. பேரின்பம்**
ஆகியோர் பங்கேற்கிறார்கள்

**பெ. மௌனசாமி**
தலைவர்

**வே. வசந்தகுமார்**
செயலாளர்

**ர. மாலதி**
பொருளாளர்

பாலதண்டாயுதம் நினைவு விழாக்குழு, கண்ணம்பாளையம், கோவை – 641 402

### துணைவேந்தர் நியமன திருத்த சட்டம்:

## உயர்நீதிமன்றத் தடைக்கு சிபிஐ எதிர்ப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு ஆளுநர் பொறுப்பில் நியமனம் பெற்ற ஆரம்ப நாளிலிருந்து திரு ஆர்.என். ரவி மலிவான அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி, ஒப்புதலுக்கு அனுப்பிய 10 க்கும் மேற்பட்ட மசோதாக்களை கிடப்பில் போட்டு, மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்த முடியாத நெருக்கடியை ஏற்படுத்தி வந்த ஆளுநரின் பொறுப்பற்ற செயலை தடுக்க வேண்டும் என பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரிடம் முறையிடப்பட்டது. இதன் மீது எந்த விளைவும் ஏற்படாத நிலையில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஏப்ரல் 8 ஆம் தேதி வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பளித்தது.

ஆளுநரின் உள்நோக்கம் கொண்ட எண்ணத்தை உணர்ந்து கொண்ட உச்ச நீதிமன்றம், அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி, ஆளுநர் கிடப்பில் போட்டு, முடக்கி வைத்திருந்த 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து சட்டங்கள் அமலாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, புதிய பல்கலைக் கழக துணை வேந்தர்கள் நியமனச் சட்டப்படி, துணை வேந்தர்கள் தேடுதல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பாஜக வழக்கறிஞர் தாக்கல் செய்த பொது நல வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட, உயர் நீதிமன்றத்தின் விடுமுறை கால அமர்வு ௵ உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்துள்ளது. உயர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட முறை, அரசு தரப்பு கேட்டுக் கொண்ட நியாயமான கால அவகாசம் தர மறுத்த விதம், அவசர, அவசரமாக இடைக் காலத் தடை உத்தரவு பிறப்பித்த வேகம் அனைத்தும் ஆழ்ந்த சந்தேகத்தை ஏற்படுத்தி, அடுக்கடுக்கான வினாக்களை எழுப்புகிறது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து குடியரசுத் தலைவர் கடந்த 13 ஆம் தேதி 14 வினாக்களை எழுப்பி, அவைகளுக்கு விளக்கம் கேட்டு, உச்ச நீதிமன்றத்திற்கு எழுதியுள்ளார். இந்த நிலையில் சென்னை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வழங்கிய திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்திருப்பது, குடிப்பங்களை ஏற்படுத்த வலிந்து மேற்கொள்ளப்பட்ட செயலாகும். நீதி பரிபாலன வரலாற்றில், சென்னை உயர் நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை தீரா களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




# அமலாக்கத்துறையின் எல்லை மீறிய செயல் கூட்டாட்சி கட்டமைப்பை சிதைக்கும் நடவடிக்கை

### உச்ச நீதிமன்றத்தின் கருத்துகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

அமலாக்கத்துறையின் எல்லை மீறிய செயலானது கூட்டாட்சி கட்டமைப்பை சிதைக்கும் நடவடிக்கை என்று கண்டனம் தெரிவித்த உச்ச நீதிமன்றத்தின் கருத்துகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது. இது குறித்து மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) தலைமை அலுவலகத்தில் கடந்த மார்ச் 6 முதல் 9 ஆம் தேதி வரை அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. சோதனை நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பாகவே 1000 கோடி ரூபாய் ஊழல் நடத்துள்ளதாக அப்போதைய பாஜக தலைவர் அண்ணாமலை அறிவித்தார். சோதனை நடவடிக்கை முடிந்த பிறகு, அண்ணாமலை ஊட்டிய செய்தியை, அமலாக்கத்துறை அப்படியே வாந்தி எடுத்தது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் அமலாக்கத்துறை அத்துமீறி நடந்து கொண்டது குறித்து, டாஸ்மாக் நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. இதன் விசாரணையின் போது, அமலாக்கத்துறை நீதிமன்றத்தின் கடுமையான விமர்சனத்துக்கு ஆளாகியது. இந்த நிலையில் டாஸ்மாக் வழக்கில் விசாரணையை தொடரலாம் என உயர் நீதிமன்றம் அனுமதித்தது. இதனைத் தொடர்ந்து அமலாக்கத் துறை கடந்த சில நாட்களாக டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் தொடங்கி பெண் அலுவலர்கள் உட்பட உயர் அலுவலர்கள் அனைவரையும் விசாரணைக்கு அழைத்து, மன உளைச்சலை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை அணுகி அரசு அலுவலர்கள் அமலாக்கத் துறையால் துன்புறுத்துவதை தடுக்க வேண்டும் என முறையிட்டுள்ளது. இந்த முறையீட்டை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், ஏ.ஜி. மாசிஹ் அமர்வு, அமலாக்கத்துறையின் செயல், எல்லா வகையிலும் எல்லை தாண்டி சென்றுள்ளது. அது கூட்டாட்சி கட்டமைப்பை சிதைக்கும் செயலாகும் என கடுமையாக எச்சரித்துள்ளது.

மூல வழக்கு குறித்த தெளிவில்லாமல் அமலாக்கத்துறை எந்த வழக்கின் மீது விசாரணை நடக்கிறது? தனி நபர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதை தவிர்த்து, நிறுவனத்தின் மீது நடவடிக்கை என்பதில் என்ன நியாயம் இருக்கிறது? என்பது போன்ற அடுக்கடுக்கான வினாக்களை எழுப்பி, அமலாக்கத்துறை அரசியல் கருவியாக தரம் தாழ்ந்து விட்டதை வெளிப்படுத்தியுள்ள உச்சநீதிமன்றத்தின் கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தொழிலாளர் வர்க்கமே!**
**நாட்டையும் மக்களையும் காக்க ஒன்றிணைவோம்!**

- தூக்கத்திலிருந்து விழித்த சிங்கம் போல எழுங்கள்!
- அடக்க முடியாத எண்ணிக்கையில் திரளுங்கள்!
- உங்களைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளைப் பனித்துளிகளைப் போல உதறுங்கள்!
- அவை நீங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது உங்கள் மீது விழுந்தவை!
- நீங்கள் அனேகம் பேர் அவர்கள் வெகுசிலரே!



**ஜூலை 9 நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வோம்!!**

**தமிழ்நாடு ஏஐடியுசி**

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57




கவிஞர்
தமிழ்ஒளி நூற்றாண்டு

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்

## நூல் வெளியீட்டு விழா

30-05-2025 | வெள்ளிக்கிழமை
மாலை 5 மணி | பெரியார் திடல்,
வேப்பேரி, சென்னை.

**தலைமை**
திரு. **த. ஸ்டாலின் குணசேகரன்** அவர்கள்
தலைவர், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

**வரவேற்புரை**
திரு. **க. சந்தானம்** அவர்கள்
மேலாண்மை இயக்குநர், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

**நூல் வெளியிட்டு சிறப்புரை**
மாண்புமிகு. **தங்கம் தென்னரசு** அவர்கள்
நிதியமைச்சர், தமிழ்நாடு அரசு

**நூலைப் பெற்றுக் கொள்பவர்**
தகைசால் தமிழர். திரு. **இரா.நல்லகண்ணு** அவர்கள்
மூத்தத் தலைவர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

**வாழ்த்துரை**
திரு. **இரா. முத்தரசன்** அவர்கள்
மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி - தமிழ்நாடு

திரு. **மு.சலீம்** அவர்கள்
மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி - புதுச்சேரி

**ஏற்புரை**
பேராசிரியர். **வீ. அரசு** அவர்கள்
நூல் பதிப்பாசிரியர்

**நன்றியுரை**
திரு. **எஸ்.சண்முகநாதன்** அவர்கள்
பொது மேலாளர், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

**கலை நிகழ்வு**
தமிழ் ஒளி உலகம் - வாசிப்பு அளிக்கை.
குழு: மரப்பாச்சி

6 தொகுதிகள்
மொத்த விலை:
ரூ.2200/
விழாவன்று
(30.05.2025)
சலுகை விலை:
ரூ.1500/

*அனைவரும் வருக*

NCBH
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in


Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.